මානව සම්පත් අභිවර්ධන ආයතනය
කොළඹ විශ්වවිද්‍යාලය ශ්‍රී ලංකාව
වාර්ෂික වාර්තාව සහ වාර්ෂික ගිණුම්

2009

மனிதவள மேம்பாட்டு நிறுவனம்
கொழும்புப் பல்கலைக்கழகம், ஸ்ரீலங்கா
ஆண்டறிக்கை மற்றும் வருடாந்த கணக்குகள்

2009

INSTITITUE OF HUMAN RESOURCE ADVANCEMENT
UNIVERSITY OF COLOMBO, SRI LANKA
ANNUAL REPORT AND ANNUAL ACCOUNTS

2009

IHRA
UNIVERSITY OF COLOMBO

පටුන

		පිටු අංකය
1	2009 දෙසැම්බර් 31 දිනෙන් අවසන් වූ වර්ෂය සඳහා වාර්ෂික වාර්තාව	01 - 13
2	2009 දෙසැම්බර් 31 දිනට ශේෂ පත්‍රය	14
3	2009 දෙසැම්බර් 31 දිනෙන් අවසන් වූ වර්ෂය සඳහා ආදායම් හා වියදම් ගිණුම	15
4	විගණකාධිපති වාර්තාව	16 - 22
5	2009 වර්ෂයට අදාල විගණන වාර්තාව පිළිබඳ ආයතනයේ අදහස්	23 - 30

பொருளடக்கம்

		பக்கம்
1.	2009 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கை	31 - 39
2.	2009 டிசெம்பர் 31ஆந் திகதியில் ஐந்தொகை	40
3.	2009 டிசெம்பர் 31ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செலவினக் கணக்குகள்	41
4.	பொதுக் கணக்குப்பரிசோதகர் அறிக்கை	42 - 50
5.	2009 ம் ஆண்டுக்கான கணக்காய்வு சம்பந்தமான கருத்ததுக்கள்	51 - 63

Contents

		Page No.
1	Annual Report for the year 2009	64 - 74
2	Balance Sheet as at 31st December, 2009	75
3	Income and Expenditure Account for the year Ended 31st December, 2009	76
4	Auditor General's Report	77 - 84
5	Comments of the IHRA on the Auditor Genaral's Report on the Accounts of the IHRA	85 - 92

மனிதவள மேம்பாட்டு நிறுவகம் **(IHRA – UoC)**
கொழும்புப் பல்கலைக்கழகம்

ஆண்டு அறிக்கை 2009

1. அறிமுகம்

மனிதவள மேம்பாட்டு நிறுவகம், 2006 ஆம் ஆண்டு 1 ஆம் இலக்க கட்டளைச் சட்டத்தினால் திருத்தப்பட்ட, 1979 ஆம் ஆண்டு 11 ஆம் இலக்கக் கட்டளைச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்டிருக்கின்றது. மனிதவள மேம்பாட்டு நிறுவகம் இலங்கைத் தொழிலாளர் படையினை உலக மற்றும் உள்ளுர் அபிவிருத்திகளுக்கு இணங்க "அறிவுப் பொருளாதாரத்தின்" ஊடாக மேம்படுத்தி வருகின்றது.

இந்த நிறுவகம் தாபிக்கப்பட்ட போது கடந்த காலத்தில் "அறிவுத் தொழிலாளர்" என்ற பதம் பயன்படுத்தப்பட்டிராத போதிலும் தொழில்புரியும் "வேலைக் குழுக்களுக்கு" கல்வி புகட்டும் பிரதான குறிக்கோள் ஒன்றே. எவ்வாறாயினும்,தற்கால அறிவுத் தொழிலாளர் வகை முகாமைத்துவ வகைகள் மற்றும் பாரம்பரிய வேலைக் குழுவினர் ஆகிய இருசாராரையும் உள்ளடக்குவதுடன் தற்போதைய நிறுவகத்தின் குறிக்கோள் எந்த வகையான மனிதவள மேம்பாட்டிற்கும் பிரயோகமாகின்றது.

நாட்டினை சரியான அபிவிருத்திப் பாதையில் வழிநடத்துவதிலும் இளம்பட்டதாரி மாணவர்களை மட்டுமன்றி தீர்மானம் மேற்கொள்பவர்கள் உள்ளிட்ட நான்டின் வேலைக் குழுக்களுக்கும் கூட கல்வி அறிவு அளிப்பதிலும் பல்கலைக்ழகங்ககளும் நிறுவகங்களும் பாரிய பொறுப்பினைக் கொண்டுள்ளன. தற்போதைய வேலைக் குழுக்களும் தீர்மானம் மேற்கொள்பவர்களும் உலகில் துரிதமாக மாற்றமடைந்துவரும் அறிவுடன் நாளதுவாக்கப் படாதவிடத்து நாடு எதிர்பார்கப்பட்ட வாறு முன்னேற்றமடைய முடியாது. சர்வதேச பல்கலைக்கழக நிறுவனங்களின் செந்தரங்களுக்கு ஏற்ப "அறிவுத் தொழிலாளர்" களுக்கு கல்வி புகட்டி நாட்டிற்கு சேவை செய்வதே தொழிலாளர் கல்வி நிறுவகத்தின் அடிப்படை எண்ணக்கருவாக இருந்ததுடன் தற்போதைய மனிதவள மேம்பாட்டு நிறுவகத்தினதும் எண்ணக்கருவாக உள்ளது.

2. நிறுவகத்தின் நோக்கும் பணியும்

நிறுவகத்தின் பெயர் மாற்றத்தின் பின்னர் பின்வரும் நோக்கு மற்றும் பணிக் கூற்றுக்கள் 2006 இல் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

நோக்கு

மனிதவள மேம்பாட்டு நிறுவகம் (IHRA),"அறிவுத் தொழிலாளர்களை" உருவாக்கிக் கொண்டிருந்த தொழிலாளர் கல்வி நிறுவகத்தில் (IWE) இருந்து கூர்ப்படைந்து,

"எங்கள் தேசிய அபிவிருத்தியின் மனித அத்திவாரத்தை வலுவூட்டும் முதிர்ந்த, விவேகமுள்ள பூகோள நிலைமைகளின் சவால்களுக்கு முகம் கொடுக்கும் ஆற்றல் படைத்த மனித வளத்தினை முன்னேற்றுவதற்கு முற்று முழுவதுமாக அர்பணிக்கப்பட்ட மேன்மையானதொரு நிறுவகமாக முயல்வதாகும்"

பணி

தொழில் புரிவோர், தொழில் வழங்குனர்கள், தொழில் முனைவோர் ஆகியோரைக் கொண்டுள்ள சகல "உழைப்பும் கற்றலும்" வேலை-குழுக்களின் ஆற்றல்களை மேம்படுத்தும் மொத்தத் தர முகாமைத்துவ முறைவழியாக்கலூடான விரிவான உயர் - மட்டக் கல்வியை பெற்றுக் கொடுப்பதற்கு வசதியளித்தல்.

நெறிமுறை செந்தரங்கள், தொழில் முனைவுத் திறன்கள், தலைமைத்துவப் பண்புகள், மற்றும் தமது பொறுப்புகளையும் உரிமைகளையும் புரிந்து கொள்ளல் என்பன ஒன்றிலொன்று சார்ந்துள்ள திறன்கள் உட்பட அவர்களின் பகுப்பாய்வு மற்றும் நுண்ணாய்வுச் சிந்தனைத் திறன்களை மேம்படுத்த மேலும் வசதியளித்தல்.

நாட்டின் "அறிவுப்- பொருளாதாரத்திற்கு" முறையானதொரு பங்களிப்புச் செய்யும் மேம்பட்ட மனித வள உருப்பொருள் தொகுதியாக "அறிவுத் தொழில்" குழுக்களை உருவாக்க முயலுதல்.

3. 2009 இல் நிறுவகத்தின் சாதனைகளும் மேம்பாடுகளும் சுருக்கமாக

3.1 நாட்டின் தொழில் புரியும் மனிதவளத்திற்குச் சேர்க்கப்பட்ட பெறுமதி

143 தொழில் புரியும் தொழிலாளர் கல்வி இளமாணிப் பட்டதாரிகள், டிப்புளோமா தாரிகள், சுமார் 3000 ஆங்கில சான்றிதழ் தாரிகள் மற்றும் 166 தமிழ் மொழி சான்றிதழ் தாரிகள் ஆகியோரின் உருவாக்கம்.

3.2 தொழிலாளர் கல்வி இளமாணிப் பட்ட நிகழ்ச்சிக்கான கேள்வி கணிசமான அளவு அதிகரிப்பு

டிப்புளோமா மற்றும் முதலாம் வருட பட்ட நிகழ்ச்சிக்கு நுழைவதற்கு போட்டி நிலை இருந்தது. 2009 செப்டம்பர் முடிவில் தொடங்கப்பட்ட கல்வியாண்டில் மொத்த மாணவர்கள் எண்ணிக்கை 590 ஆகவிருந்தது.

3.3 மனிதவள மேம்பாட்டு நிறுவகத்தின் கட்டுமாணம்

- மலசலகூடம், காவலாளி அறை என்பவற்றின் பழுதுபார்ப்பும் மேம்பாடும் மற்றும் ஏனைய நானாவித வேலைகள்
  பிரதான கட்டிடத்தின் புனருத்தாபனம்
- முதலாம் தளம் மற்றும் கணினி அறை ஆகியவற்றில் மின்செருகி, மின் விசிறி, மின் விளக்கு பொருத்துகைகள் என்பன பொருத்துதல் மற்றும் மீள் மின்கம்பியிடல்
- கலையரங்கத்திலுள்ள கணினிகளுக்கு மின்செருகிகள் நிறுவுதலும் மீள் மின்கம்பியிடலும்.

3.4 தமிழ் மொழிப் போதனை நிகழ்ச்சி கற்கைநெறி இல. 04 (கட்டணம் செலுத்தும் கற்கைநெறி) இனை அரசகரும மொழிகள் திணைக்களத்தின் அனுசரணையுடன் தொடங்கியது.

3.5 2009 மேயில் சர்வதேச வியாபாரத்தில் டிப்புளோமா இல. 02 தொடக்கம். இந்த ஒரு வருட டிப்புளோமா கற்கைநெறியினை இருபத்தொன்பது (29) தொழில்புரியும் மாணவர்கள் தொடர்கின்றார்கள்.

3.6 புவித் தகவலியலில் பட்டப்பின் டிப்புளோமா நிகழ்ச்சி நிறுவகத்தினால் நடாத்தப்படல்

இந்த புவித் தகவலியலில் பட்டப்பின் டிப்புளோமா நிகழ்ச்சிக்கு 50 மாணர்களைச் சேர்த்துக்கொள்வதற்கு 150 பரீட்சார்த்திகள் விண்ணப்பித்திருந்தனர். 2009 மார்ச்சில் கற்கைநெறி ஆரம்பிக்கப்பட்டது.

3.7 மனிதவள மேம்பாட்டில் பட்டப்பின் டிப்புளோமா நிகழ்ச்சியின் இரண்டாவது தொகுதி நிறுவகத்தினால் தொடங்கப்படல் (PG Dip. HRA)

இந்த மனிதவள மேம்பாட்டில் பட்டப்பின் டிப்ளோமா நிகழ்ச்சியின் 75 இடங்களுக்கு மாணவர்களைச் சேர்த்துக்கொள்வதற்கு 127 பரீட்சார்த்திகள் விண்ணப்பித்திருந்தனர். 2009 ஜூனில் கற்கைநெறி தொடங்கப்பட்டது.

4. முகாமைத்துவம்

மனிதவள மேம்பாட்டு நிறுவகம், 2006 ஆம் ஆண்டு 1 ஆம் இலக்க கட்டளைச் சட்டத்தினால் திருத்தப்பட்ட, 1979 ஆம் ஆண்டு 11 ஆம் இலக்கக் கட்டளை மூலம் ஆளப்படுகின்றது. மனிதவள மேம்பாட்டு நிறுவகம் கொழும்புப் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டு, நிறுவகத்தின் கல்விசார் குழுவின் பரிந்துரையின் பேரில் துணைவேந்தரால் நியமிக்கப்பட்ட முழு நேரப் பணிப்பாளரைக் கொண்டிருக்கின்றது. பணிப்பாளர் நிறுவகத்தின் கல்விசார் மற்றும் நிர்வாகத் தலைவராக உள்ளதுடன் பொறுப்புக்கூறும் அதிகாரியாகவும் உள்ளார். கல்விசார் குழு நிறுவகத்தின் கல்விசார் அதிகார சபையாக உள்ளதுடன், கட்டளைச்சட்டத்திற்கு இணங்க நியமிக்கப்பட்ட ஏனைய உறுப்பினர்களுக்கு மேலதிகமாக, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் நியமிக்கப்பட்ட எட்டு உறுப்பினர்களையும் கொண்டுள்ளது. நிறுவகம் கல்விசார் குழு, பல்கலைக்கழகம், மற்றும் ஆணைக்குழுவின் அங்கீகாரத்துடன் தாபிக்கப்பட்ட பல கற்கைச் சபைகளைக் கொண்டுள்ளது.

நிறுவகத்திற்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் ஊடாக வருடாந்த நிதி மானியம் வழங்கப்படுவதுடன், நிறுவகம் சகல நிதி மற்றும் நிர்வாக விடயங்களையும் அதன் கட்டளைச்சட்டத்திற்கு இணங்க கையாள்கின்றது. கட்டளைச்சட்டத்திற்கு இணங்க பணிப்பாளர் நிர்வாக நிதி அதிகாரியாக உள்ளதுடன், சகல கல்விசார் பொறுப்புக்களும் மனிதவள மேம்பாட்டு நிறுவகத்தின் கல்விசார் குழு, மற்றும் கொழும்புப் பல்கலைக்கழக மூதவை மற்றும் பேரவையிடம் உள்ளன. கூட்டு நிறுவன ஆட்சி நடைமுறைகள் மற்றும் கூட்டு நிறுவனப் பண்பாடு என்பன படிப்படியாக அறிமுகப்படுத்தப்படுகின்றன.

4.1 கல்விசார் குழுவும் கற்கைச் சபைகளும்

4.1.1 கல்விசார் குழு (2009 திசெம்பர் வரை)

மீளாய்வுக்குரிய ஆண்டில் பத்து (10) மாதாந்தக் கூட்டங்கள் நடாத்தப்பட்டிருந்தன. கல்விசார் குழுவின் உறுப்பினர்கள் பின்வருமாறு:

தலைவர் - பணிப்பாளர்/ம.வ.மே.நி - கலா. டபிள்யூ. கே. ஹிரிம்புரேகம (திசெம்பர் 2005 முதல்)

பதிவழி உறுப்பினர்கள்

- பீடாதிபதி– கலைப்பீடம் - பேரா. இந்திரலால் டி சில்வா
- பீடாதிபதி– கல்விப் பீடம் - பேரா. எஸ்.சந்திரசேகரம்
- பீடாதிபதி– விஞ்ஞானப் பீடம் - பேரா. டீ. ஆர். ஆரியரட்ண

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள்

கலா. ஏ.எச்.எம். ஹுசெயின்	- முந்நாள் பல்கலைக்கழக கல்வியிலாளர்
பேரா.சுனில் சந்திரசிரி	- பீடாதிபதி – பட்டக் கற்கைகள் பீடம்
திரு. ஏ.பீ. குணரட்ண	- முந்நாள் அதிபர் - ஆனந்தாக் கல்லூரி, கொழும்பு
திரு. ஏச்.எம்.என். வரக்காஉல்ல	- முந்நாள் பதிவாளர், கொழும்புப் பல்கலைக்கழகம்
திரு. எம்.ஜீ.ஜீ. ஹெமகுமார	- சிரேஷ்ட விரிவுரையாளர்,மனித வள மேம்பாட்டு நிறுவகம்
திரு. பாலித்த பர்ணாந்து	- மேலதிக அரசுத் தலைமை வழக்குரைஞர், நீதி அமைச்சு
திரு. மஹிந்த மதிஹாஹெவா	- செயலாளர், தொழில் அமைச்சு
திரு. கே. கமகே	- நிறைவேற்றும் பணிப்பாளர், தேசிய ஆபத்தான மருந்துகள் கட்டுப்பாட்டுச் சபை

கற்கைச் சபைகளை பிரதிநிதித்துவப்படுத்தும் உறுப்பினர்கள்
(சகல சபைகளுக்கும் புதிய பெயரிடப்பட்டுள்ளது)

கலா. கே.பீ.எஸ்.சீ. ஜயரட்ண திரு. ஆர்.எம்.ஆர்.பீ. இராஜபக்ஷ	- தொழிலாளர் கல்விச் சபை/ (மனிதவள கல்வி நிகழ்ச்சி கற்கைச் சபை)
கலா. பீ.எம். கிரிபண்டா திருமதி. பீ.கே.பி. அபேசூரிய	- ஆங்கில மொழிப் போதனைச் சபை/ (மொழிகள் போதனை நிகழ்ச்சி கற்கைச் சபை)
திரு. டிபிள்யூ.என். வில்சன் கலா. டிபிள்யூ.எம்.கே. விஜேதுங்க	- விரிவாக்கப் படநெறிச் சபை/ (விரிவாக்க நிகழ்ச்சி கற்கைச் சபை)

4.1.2 கற்கைச் சபைகள்

மீளாய்வுக்குரிய ஆண்டில் மூன்று கற்கைச் சபைகளும் நடாத்திய கூட்ட விபரங்கள் (வழமையாக ஒவ்வொரு மாதமும்) வருமாறு:

அ) மனிதவள கல்வி கற்கைச் சபை - 12 கூட்டங்கள்

ஆ) மொழிகள் போதனை நிகழ்ச்சி கற்கைச் சபை - 10 கூட்டங்கள்

இ) விரிவாக்க நிகழ்ச்சிகள் கற்கைச் சபை - 10 கூட்டங்கள்

4.2 கல்விசார் ஊழியர் குழாம், ஆதரவு ஊழியிர் குழாம், மற்றும் ஏனைய சேவைகள்

	பதவி	உறுப்பினர்கள்	பதவியின் தன்மை
01	பணிப்பாளர்	1	கல்விசார் மற்றும் நிர்வாகம்
02	சிரேஷ்ட விரிவுரையாளர்	1	கல்விசார்
03	தகுதிகாண்நிலை விரிவுரையாளர்	2	கல்விசார்
04	கல்விசார் இணைப்பாளர்	1	
05	கற்கைநெறி இணைப்பாளர்	4	கல்விசார்
06	பயிற்றுவிப்பாளர் (கணனித் தொழில்நுட்பம்)	1	தற்காலிகம்
07	பிரதி நிதியாளர்	1	நிர்வாகம்
08	சிரேஷ்ட உதவிப் பதிவாளர்	1	நிர்வாகம்
09	உதவிப் பதிவாளர்/ பரீட்சைகள்	1	நிர்வாகம்
10	சிரேஷ்ட அலுவலர் உதவியாளர் (எழுதுவினைஞர் சேவை)	3	ஆதரவு
11	சிரேஷ்ட அலுவலர் உதவியாளர் (சுருக்கெழுத்தாளர்)	3	ஆதரவு
12	அலுவலர் உதவியாளர்	2	ஆதரவு
13	எழுதுவினைஞர் (தரம் 1)	1	ஆதரவு
14	எழுதுவினைஞர் (தரம் 2)	2	ஆதரவு
15	கணனிப் பிரயோக உதவியாளர்	3	ஆதரவு
16	கணக்குப் பதியுனர்	1	ஆதரவு
17	சாரதி	2	ஆதரவு
18	அலுவலக இயந்திர இயக்குனர்	1	ஆதரவு
19	துவிச்சக்கர வண்டிச் சிப்பந்தி	1	ஆதரவு
20	தொழிலாளி	5	ஆதரவு
	நூலக சேவை		
21	சிரேஷ்ட உதவி நூலகர்	1	கல்விசார் மற்றும் நிர்வாகம்
22	நூலக உதவியாளர்	1	ஆதரவு
23	நூலகச் சிப்பந்தி	1	ஆதரவு
24	தொழிலாளி	1	ஆதரவு

நிறுவகத்தின் சகல ஊழியர்களுக்கும் அவர்களது புகைப்படத்துடன் கூடிய பிரத்தியேக அடையாள அட்டை வழங்கப்பட்டுள்ளது. இது நவீன நிறுவகங்களின் சிறந்த முகாமைத்துவத்திற்கு அத்தியவசியமானது. நிறுவகத்தின் சேவையை மேம்படுத்துவதற்கு நிறுவக மனித வளத்தை தரமுயர்த்துவதற்கு மிகவும் முக்கியமானதாகும்.

4.2.2 நிறுவகத்தின் மனித வள மேம்பாடு – சுருக்கமாக

	திகதி/ மாதம்	கருத்தரங்கு/ செயலமர்வு/ பயிற்சி நிகழ்ச்சி	பங்குபற்றியவரின் பெயர்	கொடுப்பனவுத் தொகை	வழங்குனர்
01	27 மற்றும் 28 ஜன. 2009	சர்வதேச ஆராய்ச்சி ஆங்வரங்கு – ஐக்கிய இராச்சியம்	செல்வி கேபீ மாதொட்டாராச்சி	ரூ.202,031	ஸ்டபோர்ட் பல்கலைக்கழகம், ஐக்கிய இராயச்சியம்
02	18.02.2009	சிறந்த ஆட்சிநிர்வாகம் தொடர்பான கருத்தரங்கு	கலா. டபிள்யூ.கே. ஹிரிம்புரேகம	ரூ.3,360	வாழ்க்கைத் தொழில் மற்றும் தொழில்நுட்பப் பயிற்சி அமைச்சு
03	2009 ஆம் ஆண்டில்	உயர் ஆங்கிலம் - ஆங்கிலத்துறை	திருமதி ஏஎஸ் ஜயரட்ண	ரூ.12,100	ஆங்கிலத்துறை, கொழும்புப் பல்கலைக்கழகம்
04	25.06.2009	நூலக மற்றும் தகவல் விஞ்ஞானத்தில் தேசிய மாநாடு	திருமதி. ஆர்எம்எஸ்என் ரட்நாயக்க	ரூ. 1,500	இலங்கை நூலகச் சங்கம்
05	ஆகஸ்ட்	நூலகச் சிப்பந்திகளுக்கான பயிற்சி நிகழ்ச்சி – தேசிய நூலக தகவல் விஞ்ஞான நிறுவகம்	திரு. எம்டிஎம்யூ சமரசேகர	ரூ. 5,000	தே.நூ.த.வி.நி – கொழும்பு பல்கலைகழகம்
06	செப்டம்பர்	அரசாங்க பெறுகைகள் முறைவழி தொடர்பில் பயிற்சி நிகழ்ச்சி	திரு. டிஎம்எஸ்என்கே பண்டார	ரூ. 5,000	அரசாங்க கணக்கியல் நிதியியல் நிறுவகம்
07	ஒக்தோபர்	நூலக மற்றும் தகவல் விஞ்ஞானத்தில் டிப்புளோமா – மட்டம் 111	திருமதி பீவைஜ ராஜபக்ஷ	ரூ. 12,000	இலங்கை நூலகச் சங்கம்

5. கற்கை நிகழ்ச்சிகளும் மாணவர் எண்ணிக்கையும்

மனிதவள மேம்பாட்டு நிறுவகம் தொழில்புரியும் மாணவர்களை "அறிவுத் தொழிலாளர்களாக" மேம்படுத்துவதற்காக 4 பிரதான பரப்புகளில் கொழும்புப் பல்கலைக்கழகத்தின் நிகழ்ச்சிகளை வழங்குகின்றது.

அந்த வித்தியாசமான பரப்புகளாவன:

அ) இளமாணிப் பட்டப் கற்கைநெறி (பீ.எல்.ஈ. பட்டம்)
ஆ) பட்டமுன் டிப்ளோமா நிகழ்ச்சி (பீ.எல்.ஈ. டிப்ளோமா நிகழ்ச்சியும் ஒரு வருட சுயநிதியிடப்பட்ட டிப்ளோமாவும்)
இ) பட்டப்பின் நிகழ்ச்சிகள் (தோற்றுவிக்கப்பட்ட நிதி)
ஈ) சான்றிதழ் கற்கைநெறிகள் மற்றும் குறுங்கால செயலமர்வுகளும் ஏனைய நிகழ்ச்சிகளும் (தோற்றுவிக்கப்பட்ட நிதி)

5.1 அடிப்படைப் பட்டப் கற்கைநெறி– தொழிலாளர் கல்வியில் இளமாணிப் பட்டம் (**BLE**)

இந்த நிகழ்ச்சி இரு கூறுகளைக் கொண்டிருப்பதுடன் அது உள்வாரியான ஒரு இளமாணிப் பட்ட கற்கை நிகழ்ச்சியாகும். தொழிலாளர் கல்வியில் இளமாணிப் பட்டம் டீடுந (பீ.எல்.ஈ.) கொழும்புப் பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படும் மூன்று வருடப் பட்ட நிகழ்ச்சியாகும். இளமாணிப்பட்ட முதலாம் வருடத்திற்கு நுளைவதற்குத் தகுதி பெறாதவர்கள், டிப்ளோமா வருட நெறியினையும் தொடர்பான பரீட்சைகளையும் பூர்த்தி செய்ய வேண்டும். 2009 இல் இறுதிப் பரீட்சையை முடித்திருந்த நூற்று நாற்பத்து மூன்று (143) தொழில் புரியும் பட்டதாரிகள் நிறுவகத்தின் BLE பட்டத்தை பெறத் தகுதி பெற்றிருந்ததுடன் அவர்களுக்கான பட்டமளிப்பு 2010 இல் நடைபெறும்.

2009 ஆம் ஆண்டில் இந்தக் கல்விசார் நிகழ்ச்சியின் வெவ்வேறு மட்டங்களில் பதிவுசெய்யப்பட்டிருந்த தொத்த மாணவர் எண்ணிக்கை 590 ஆகவிருந்ததுடன் அந்த விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

கல்விசார் நிகழ்ச்சிகளின் மட்டங்கள்	மொத்த மாணவர் எண்ணிக்கை		2008 இற்கான புதிய பதிவுகள்		2009 இற்கான புதிய பதிவுகள்	
டிப்ளோமா மட்டம்	184	184	96	96	59	59
தொழிலாளர் கல்வி இளமாணிப் பட்டம் பகுதி I (சிங்கள மொழி மூலம்)	268	268	177	177	189	189
தொழிலாளர் கல்வி இளமாணிப் பட்டம் பகுதி I (ஆங்கில மொழி மூலம்)	0		0		0	
தொழிலாளர் கல்வி இளமாணிப் பட்டம் பகுதி II (சிங்கள மொழி மூலம்)	210	230	217	217	146	146
தொழிலாளர் கல்வி இளமாணிப் பட்டம் பகுதி II (ஆங்கில மொழி மூலம்)	20		0		0	
தொழிலாளர் கல்வி இளமாணிப் பட்டம் பகுதி III (சிங்கள மொழி மூலம்)	136	154	190	208	196	196
தொழிலாளர் கல்வி இளமாணிப் பட்டம் பகுதி III (ஆங்கில மொழி மூலம்)	18		18		0	
மொத்தம்	836		698		590	

தெரிவுப் பரீட்சையில் நன்றாக செயற்பட்ட புதிய மாணவர்களை 2009 ஆம் கல்வியாண்டிற்கு டிப்புளோமா மட்டம் மற்றும் தொழிலாளர் கல்வியில் இளமாணிப் பட்டம் பகுதி I, இற்குத் தெரிவதற்க்கான நேர்முகத் தேர்வு 17 மே 2009 அன்று நடாத்தப்பட்டது. அதற்கிணங்க, 59 மாணவர்கள் மற்றும் 111 மாணவர்கள் டிப்புளோமா மட்டத்திற்கு நேரடியாகவும் மற்றும் பட்ட நிகழ்ச்சி பகுதி I இற்கும் முறையே தெரிவு செய்யப்பட்டிருந்தனர். இதற்கு மேலதிகமாக 78 மாணவர்கள் பீ.எல்.ஈ. பகுதி I இற்கு டிப்புளோமா மட்டத்திலிருந்து தெரிவு செய்யப்பட்டிருந்தனர். இரண்டு மட்டங்களுக்குமான மொத்த மாணவர் எண்ணிக்கை 189 ஆகவிருந்தது.

டிப்ளோமா மட்டம், தொழிலாளர் கல்வியில் இளமாணி பகுதி I, II, மற்றும் III மட்டங்கள் ஆகியவற்றின் வருடாந்தப் பரீட்சைகள் திட்டமிட்டவாறு 2008 இல் நடாத்தப்பட்டதுடன் பெறுபேறுகளும் வெளியிடப்பட்டன.

டிப்ளோமா பெறுபேறுகள்: 2ஆம் அரையாண்டு
சித்தி 69
சித்தியடையாதோர் 28

பகுதி Iபெறுபேறுகள்:	(1 ஆம் அரையாண்டு)	பீ.எல்.ஈ. பகுதிI (மறு தடைவ – பழைய பாடவிதானம்)
சித்தி	132	சித்தி 22
சித்தியடையாதோர்	33	மறு தடைவ 08

பகுதி Iபெறுபேறுகள்:	(1 ஆம் அரையாண்டு)	பீ.எல்.ஈ. பகுதி II(2 ஆம் அரையாண்டு)
சித்தி	166	155
சித்தியடையாதோர்	25	39

பீ.எல்.ஈ பகுதி II (மறு தடைவ – பழைய பாடவிதானம்)
சித்தி 26
சித்தியடையாதோர் 29

மனிதவள மேம்பாட்டு நிறுவகத்துடன் இணைக்கப்பட்ட கொழும்புப் பல்கலைக்கழக இந்த பட்டதாரி மாணவர்கள் ஒரு பிரத்தியேகமான தொழில்புரியும் மாணவர் குழுவாகும். தொழில்புரியும் போதே அவர்களின் தொழில்சார் மேம்பாட்டிற்காக அவர்கள் அரசாங்க நிதியத்தினால் ஆதரவளிக்கப்படுவதுடன் அவர் தாம் பல்கலைக்கழகத்திலிருந்து பெற்றுக்கொள்ளும் அறிவினை அவர்களின் தொழிலில் நேரடியாகப் பங்களிக்கின்றனர். அவர்கள் பல்கலைக்கழக வசதிகளை நாளொன்றிற்கு 2.5 மணித்தியாலங்கள் மட்டும் 17.00 மணியின் பின்னர் மாலையில் பயன்படுத்துவதுடன் கொழும்புப் பல்கலைக்கழகத்தில் தற்போதைய சூழ்நிலையில் இந்த விரிவுரை மண்டபங்களுக்கான அணுகல் மிகவும் மட்டுப்படுத்தப்பட்டதாய் உள்ளது.

தற்போது நிறுவகத்தில் 3 நிரந்தர விரிவுரையாளர்கள் மாத்திரம் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் இதற்கு மேலதிகமாக வருகைதரும் விரிவுரையாளர்களின் சேவை பெறப்படுகின்றது.

5.2 பட்டப்பின் டிப்ளோமா கற்கைநெறி

பூகோள தகவல் முறைமைகளில் (GIS) பட்டப்பின் டிப்ளோமா என்ற தலைப்பில் பட்டப்பின் நிகழ்ச்சி ஒன்றை 2009 ஆம் ஆண்டு மார்ச்சில் நிறுவகம் தொடங்கியது. 150 மாணவர்கள் விண்ணப்பித்திருந்ததுடன் 102 மாணவர்கள் வார இறுதி நிகழ்ச்சிக்கான தெரிவுப் பரீட்சைக்குத் தோற்றியிருந்தார்கள். அதற்கிணங்க 50 பேர் வார இறுதி நிகழ்ச்சிக்குத் தெரிவு செய்யப்பட்டிருந்தார்கள்.

5.3 டிப்ளோமாகற்கைநெறிகள்

தற்போது நிறுவகம் பின்வரும் உள்ளக டிப்ளோமா கற்கைநெறிகளை நாட்டின் தேவைக்காக நடாத்துவதுடன் மாணவர்கள் கற்கைநெறிக் கட்டணம் செலுத்தித் தொடர்கின்றனர்.
ஒரு வருட டிப்ளோமா:

அ) போதைப்பொருள் துஷ்பிரயோக முகாமைத்துவக் கற்கைகளில் டிப்ளோமா (DDAMS)
ஆ) சாரதி மற்றும் சாலைப்பாதுகாப்பு போதனாசிரியர் பயிற்சி நிகழ்ச்சி (DRSIT)
இ) கிராமிய மேம்பாட்டுக் கற்கைகளில் டிப்ளோமா (DRDS)
ஈ) கணனிப் பிரயோகங்களில் சான்றிதழ் கற்கைநெறி (CCCA)
உ) சர்வதேச வியாபாரத்தில் டிப்ளோமா (DIB)

டிப்ளோமா நிகழ்ச்சிகளில் மாணவர்களின் எண்ணிக்கை

	DDAMS	**DRSIT**	**CCCA**	**DIB**
ஆண்டு	2009	2009	2009	2009
பதிவு செயயப்பட்டோர் எண்ணிக்கை	56	30	47	29

ஆங்கில மொழி, சர்வதேச ஊடாக மொழியாக இருப்பதனால், சர்வதேச வர்த்தக டிப்புளோமா புதிய பாடநெறிகளில் ஒரே தன்மையையும் சமமான தரத்தையும் பெறவென 2006 ஆம் ஆண்டில் மனிதவள மேம்பாட்டு நிறுவனத்தினால் உப சட்டங்கள் தயாரிக்கப்பட்டன.

5.4 சான்றிதழ் கற்கைநெறிகள்

5.4.1 ஆங்கில மொழி நிகழ்ச்சிகள்

கற்கைநெறி இல. 28, 2009 இல் பூர்த்தியாக்கப்பட்டது. இறுதிப் பரீட்சைகள், 2009.ஏப்பிரல் 26,மே 2 மற்றும் 03 ஆம் திகதிகளில் முறையே உயர், இடைநிலை மற்றும் ஆரம்ப மட்டங்களுக்காக நடாத்தப்பட்டது. மாணவர்கள் 29-03-2009 இல் நடைபெற்ற இல. 29 ஆங்கில மொழி சான்றிதழ் கற்கைநெறி தகுதிநிலைப் பரீட்சையில் அவர்களது ஆங்கிலத் திறனுக்கு இணங்க மூன்று மட்டங்களாகத் தரப்படுத்தப்பட்டனர். இந்தப் கற்கைநெறி தொடர்பான தகவல்களைப் பின்வரும் அட்டவணைகள் காட்டுகின்றன.

2005 ஆம் ஆண்டிலிருந்து சகல ஆங்கிலப் கற்கைநெறிகளுடனும் தொடர்புபட்ட மாணவர் எண்ணிக்கை

வருடம்	2005	2006	2007	2008	2009
பதிவு செய்தோர் எண்ணிக்கை - மாணவர் கற்கைநெறிகள் + ஆசிரியர் கற்கைநெறிகள்	3716	4486	2679	6230	3439
சான்றிதழ் பெற்றோர் எண்ணிக்கை	2298	3550	2511	2493	1961

2009 உடன் தொடர்பான ஆங்கில நிகழ்ச்சி பற்றிய தகவல்கள்.

ஆங்கிலப் கற்கைநெறி இல. 29, 2009 இல் மாணவர்களுக்கு நிறைவுசெய்யப்பட்டதுடன் அதன் விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

ஆங்கில மொழியில் சான்றிதழ் கற்கைநெறியின் மாணவர்கள் எண்ணிக்கை – 2009

	உயர் மட்டம்	இடைநிலை மட்டம்	ஆரம்ப மட்டம்
பதிவு செய்யப்பட்டோர்	664	1196	619
அதி விசேட சித்தி	57	50	14
சிறப்புச் சித்தி	204	328	130
சாதாரண சித்தி	268	548	313
சித்தியடைந்தோர் (மொத்தம்)	529	926	457

	உயர் மட்டம்	இடைநிலை மட்டம்	ஆரம்ப மட்டம்
பதிவு செய்யப்பட்டோர்	922	1068	1260

ஆசிரியர்களுக்காக இரண்டு ஆங்கிலப் கற்கைநெறிகள் 2009 இல் முடிவடைந்திருந்தது. அவை தொடர்பான விபரம் கீழே தரப்பட்டுள்ளன.

ஆசிரியர்களுக்கான ஆங்கிலத்தில் சான்றிதழ் கற்கைநெறியின் மாணவர்கள் எண்ணிக்கை – 2009

	பகுதி III	பகுதி II	பகுதி I
பரீட்சைக்குப் பதிவு செய்யப்பட்டோர்	88	39	-
அதி விசேட சித்தி	13	-	
சிறப்புச் சித்தி	21	09	
சாதாரண சித்தி	25	19	
சித்தியடைந்தோர்	59	28	

	பகுதி III	பகுதி II	பகுதி I
பதிவு செய்யப்பட்டோர்	72	85	32

ஆங்கில வகுப்புக்கள் கலைப் பீட நிலமனையிடங்களில் மண்டபச் சிப்பந்திகளுக்கும் வகுப்பறைகளுக்கும் நியாயமான கொடுப்பனவு செய்யப்பட்டுநடாத்தப்படுகின்றன. சகல ஆசிரியர்களும் வருகை தரும் விரிவுரையாளர்களாக நியமிக்கப்பட்டிருந்ததுடன் கலா. பீ.எம். கிரிபண்டா மனித வள மேம்பாட்டு நிறுவகத்தின் இணைப்பாளராக செயற்பட்டார்.

5.4.2 தமிழ் மொழி நிகழ்ச்சிகள்

இளம் பாடசாலை விட்டு விலகியோருக்காகவும் அரசாங்கப் பணியாளர்களுக்குமாக அரசகரும மொழிகள் திணைக்களத்தின் கூட்டுழைப்புடன் 2007 இல் புதிய நிகழ்ச்சி தொடங்கப்பட்டது. இது அரசகரும மொழிகள் திணைக்களத்தினால் பொதுப் பாட விதானத்திற்கு இணங்க சிங்களம் பேசுபவர்களுக்காக நடாத்தப்படும் தேசிய பரீட்சைகளுக்காக மாணவர்களைத் தயார்ப்படுத்தும் நோக்குடன் வடிவமைக்கப்பட்டது. அடிப்படை மட்டம் பேச்சுக் கூறுக்கானது இது தேசிய பரீட்சையில் மட்டம் 3 ஆகவிருக்கும். குறைந்த கற்கைநெறிக் கட்டணமும் உச்ச தராதரங்களைப் பேணலும் தேசிய சேவையில் முக்கியமான்வைகளாக உள்ளன. கிராமியப் பிரதேசங்களைச் சேர்ந்த மாணவர்களும் கற்கைநெறிகளுக்கான அணுகலைக் கொண்டிருந்தனர்.

தமிழ் மொழியில் அடிப்படைப் கற்கைநெறி இல. 02, 2009 இல் முடிவடைந்திருந்தது. இறுதிப் பரீட்சைகள் 2009 பெப்பிரவரி, 1 ஆம்திகதி நடைபெற்றது. இந்தப் கற்கைநெறி தொடர்பான பொருத்தமான தகவல்கைள பின்வரும் அட்டவணைகள் காட்டுகின்றன.

பதிவு செய்யப்பட்ட மாணவர் எண்ணிக்கை – 278
சம்மந்தப்பட்ட ஆசிரியர் எண்ணிக்கை – 08

அடிப்படைத் தமிழ் கற்கைநெறி பற்றிய தகவல்கள் - இல. 02

	இடைநிலை மட்டம்	அடிப்படை மட்டம்
பதிவுசெய்தோர் (பரீட்சைக்கு)	37	193
அதி விசேட சித்திகள்	16	77
சிறப்புச் சித்திகள்	09	61
சாதாரண சித்திகள்	06	28
சித்தியடைந்தோர்	32	166

தமிழ் மொழியில் சான்றிதழ் கற்கைநெறி இல. 04– 2009 மார்ச்சு 07 இல் ஆரம்பிக்கப்பட்டது.

பதிவு செய்த மாணவர்கள் எண்ணிக்கை
அடிப்படை மட்டம் 257
இடைநிலை மட்டம் 101
உயர்நிலை மட்டம் 17
சம்மந்தப்பட்ட ஆசிரியர்கள் எண்ணிக்கை 10

6. நூலகம்

மனித வள முகாமைத்துவ நிறுவகத்தின் நூலகம் சுமார் 21,970 புத்தகங்களைக் கொண்டுள்ளதுடன் 2002 ஆம் ஆண்டு முதல் 5 ஊழியர்களுடன் கல்விப் பீடத்தின் தற்காலிகக் கட்டிடமொன்றில் அமைந்துள்ளது. தொழிலாளர் கல்வி தொடர்பான அரிதான சேகரிப்புக்களைக் கொண்ட இந்த பெறுமதிமிக்க வளம், பல்கலைக்கழக சமூகத்தின் உச்ச பயன்பாட்டிற்காக அவசரமாக மீள ஒளுங்கமைக்கப்பட வேண்டியுள்ளது.

7. நிதிச் செயற்பாடுகள்

2009 ஆம் ஆண்டிற்கான மொத்த அரசாங்க மானியம் ரூபா 16.8 மில்லியன் ஆக இருந்ததுடன் நிறுவகத்தினால் பிறப்பிக்கப்பட்ட வருமானம் ரூபா 39.4 மில்லியனாக இருந்தது.

2009 ஆம் ஆண்டு இறுதிக் கணக்குகளின் பிரதான விடயங்கள்

வருமானம் ஒ ரூ. 1000			செலவினம் ஒ ரூ. 1000		
01	அரச மானியம் - மீண்டும் வரும்	16,806	01	வேதனங்கள் - கல்விசார்	4,209
02	அரச மானியம் - மூலதனம்	1,500	02	வேதனங்கள் - கல்வி சாரா	11,539
03	அரச தகவல் தொழில்நுட்ப மானியம்	-	03	வருகை தரும் விரிவுரையாளர்கள்	346
04	விரிவாக்கப் கற்கைநெறிகள் - வருமானம்	34,886	04	ஒப்பந்த சேவைகள்	1,993
05	ஏனைய உழைப்புகள் (மீ. வ. செல. ஆக)	4,606	05	பராமரிப்புச் செலவினங்கள்	856
06	ஏனைய உழைப்புகள் (மூலதன செல. ஆக)	-	06	கொள்வனவுகள் - மூலதனம்	1,772
			07	விரிவாக்கல் கற்கைநெறிகள் தொடர்பிலான செலவுகள்	29,826
			08	ஏனைய செலவினங்கள் - பட்டமளிப்புகள் முதலியன	1,248
01	மூலதன விடயங்களின் மொத்தத் தேறிய மதிப்பு	55,243	01	சொத்துரிமமும் பொறுப்புகளும்	66,951
	நடைமுறை சொத்துக்கள்	11,708			
	மொத்தம்	66,951		மொத்தம்	66,951

8. குறிப்பு

தற்போது (2009 இல்) நிறுவனத்தில் பட்டப்படிப்பு மாணவர்கள் 590 பேர் நான்கு குழமங்களாக உள்ர். அத்துடன் மூன்று வருட பட்டப்படிப்பு நிகழ்ச்சித் திட்டத்திற்கு அரசாங்கம் நிதி வழங்குகிறது.

மனிதவள மேம்பாட்டு நிறுவனம் நாட்டின் தொழிலாளர்களது வாண்மை அறிவினை மேம்படுத்தும் நோக்குடன் 2009 ஆம் ஆண்டில் பட்டப்பின் டிப்ளோமா பூகோள தகவலியல் கற்கைநெறியினை அறிமுகப்படுத்துகின்றது. அரசாங்க மானியங்களுக்கு மேலாக, நிறுவனம் 38 மில்லியன் ரூபாவினை கட்டணம் அறவிடம் கற்கைநெறிகள் மூலம் வருமானமாக ஈட்டுகின்றது.

28.09.2012 பணிப்பாளர்

மனிதவள மேம்பாட்டு நிறுவகம்
கொழும்புப் பல்கலைக்கழகம்

2009 திசெம்பர் 31 இல் நிதி நிலைமைக் கூற்று

சொத்துக்கள்	குறிப்பு	2009	2009	2008	2008
சொத்துக்கள்					
நடைமுறையில்லா சொத்துக்கள்					
ஆதனம், பொறித் தொகுதியும் உபகரணங்களும்	1	24,108486.95		14,437,205.94	
முதலீடுகள்	2	31,134,255.32		22,073,761.12	
			55,242,742.27		36,510,967.06
நடைமுறைச், சொத்துக்கள்	4				
பண்டங்கள்/இருப்பு	4A	831,279.01		500,095.83	
வியாபார மற்றும் ஏனைய வருமதிகள்	4B	4,615,281.15		4,776,578.43	
முன் கொடுப்பனவுகள்	4C	17,043.98		17,943.75	
காசும் காசுக்குச் சமமானவைகளும்	4D	6,244,682.80		10,871,402.91	
			11,708,286.94		16,166,020.92
மொத்த சொத்துக்கள்			66,951,029..21		52,676,987.98
பொறுப்புக்கள்					
நடைமுறைப் பொறுப்புக்கள்	5				
சென்மதிகள்	5A	5,811,068.12		4,019,103.00	
அட்டுறு செலவினங்கள்	5B	332,181.69		405,763.47	
			6,143,249.81		4,424,866.47
நடைமுறையில்லா பொறுப்புக்கள்	6				
சென்மதிகள்	6A	29,952,904.64		26,144,985.90	
ஒத்தி வைக்கப்பட்ட வருமானம்	6B	19,164,429.60		14,691,812.80	
பணிக்கொடைக்கான ஒதுக்கம்	6C	5,923,905.00		5,911,487.51	
			55,041,239.24		46,748,286.21
மொத்தப் பொறுப்புக்கள்			61,184,489.05		51,143,152.68
			5,766,540.17		1,503,835.30
தேறிய சொத்து/சொத்துரிமம்	7				
செலவிடப்படாத மூலதன மானியம்	7A	269,273.56		448,290.63	
திரட்டிய நிதியம்	7B	5,488,562.81		1,043,724.27	
ஒதுக்கங்கள் - நன்கொடைகள்	7C	8,703.80		11,820.40	
மொத்தத் தேறிய சொத்து/ சொத்துரிமம்			5,766,540.17		1,503,835.30

ஒப்பம்
டீ. எம். எஸ். ஏன். கே. பண்டார
(மூத்த பதில் நிதியாளர்)

ஒப்பம்
கலா. டபிள்யூ. கே. ஹிரிம்புரேகம
(பணிப்பாளர்)

மனிதவள மேம்பாட்டு நிறுவகம்
கொழும்புப் பல்கலைக்கழகம்

2009 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று

	குறிப்பு	2009	2008
		ரூ.	ரூ.
செயற்பாட்டு வருமானம்			
மீண்டும் வரும் மானியம்		16,806,000.00	16,380,000.00
அரச மானியங்களின் கடன் தீரத்தல் - தேய்மானம்	6B + 7B	4,093,672.56	2,460,078.93
வருமானம் - ஏனைய வருமானம்	8B	39,492,011.86	27,026,731.61
		60,391,684.42	45,866,810.54
செயற்பாட்டு செலவினங்கள்			
ஆளணி வேதனங்கள்	9A	15,604,513.75	15,051,375.45
பிரயாணம்	9B	24,491.00	5,453.00
விநியோகங்களும் நுகர்வுகளும்	9C	1,771,873.91	1,353,191.68
பராமரிப்பு	9D	855,850.84	403,841.48
ஒப்பந்த சேவைகள்	9E	1,993,038.84	1,848,675.61
ஏனைய செயற்பாட்டு செலவினங்கள்	9F	1,223,902.97	1,245,649.19
புணிக்கொடை	9G	490,022.50	
தேய்மானம்	9H	4,093,672.56	2,460,.078.93
விரிவாக்க நிகழ்ச்சிகள் மீதான செலவினங்கள்	9I	29,825,882.84	19,628,572.59
அகற்றல்களும் பதிவழிப்புகளும்			9,055.55
மொத்த செயற்பாட்டு செலவினங்கள்		55,883,249.21	42,005,893.48
காலப் பகுதிக்கான தேறிய மிகை/ (பற்றாக்குறை)		4,508,435.21	3,860,917.06

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
AUDITOR GENERAL'S DEPARTMENT

මගේ අංකය / எனது இல / My no — சிஈ/சி/ஐஎச்ஆர்ஏ/09/எப்/ஏ
මබේ අංකය / உமது இல / Your No.
දිනය / திகதி / Date — 2010 யூன் 08

பணிப்பாளர்,

கொழும்பு பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்ட மனித வள மேம்பாட்டு நிறுவகம்

கொழும்பு பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்ட மனித வள மேம்பாட்டு நிறுவகத்தின் 2009 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மீது 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச் சட்டத்தின் 108(2) ஆம் பிரிவு மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13 (7) (ஏ) பிரிவின் படி கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை.

கொழும்பு பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்ட மனித வள மேம்பாட்டு நிறுவகத்தின் 2009 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச் சட்டத்தின் 18 ஆம் பிரிவின் பிரகாரம் சட்டமாக்கப்பட்ட 1979 இன் 11 ஆம் இலக்க மனித வள மேம்பாட்டு நிறுவக கட்டளைச்சட்டத்தின் 23 ஆம் பிரிவு, பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 108(1) மற்றும் (111) ஆம் பிரிவுகள், மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3), (4), (7) ஆம் உப பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. இவ் அறிக்கையானது பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 108(2) ஆம் பிரிவு மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவின் பிரகாரம் வழங்கப்படுகின்றது. எனது கருந்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்டுகின்றன.

ADVANCEMENT
09 JUL 2010
IHRA
DIRECTOR'S

1.2 நிதிக்கூற்றுக்கள் தொடர்பான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாக சமர்ப்பிக்கப்படுவது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பெருட்படுத்தக்கூடிய தவறான கூற்றுக்களில் இருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரித்து நியாயமாகச் சமர்ப்பிக்கப்படுவதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை திட்டமிடல், அமுலாக்கல் மற்றும் செயற்படுத்தல், பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகளைத் தெரிவுசெய்து பிரயோகித்தல் சந்தர்ப்பங்களுக்கு உகந்த வகையில் நியாயமாக கணக்கீட்டு மதிப்பீடுகளைத் தயாரித்தல் என்பன இப் பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

නිදහස් චතුරශ්‍රය, කොළඹ 07, ශ්‍රී ලංකාව
சுதந்திர சதுக்கம் கொழும்பு 07 இலங்கை
INDEPENDENCE SQUARE, COLOMBO 07, SRI LANKA
දුරකථනය / தொலைபேசி / Telephone 2691151
ෆැක්ස් අංකය / பக்ஸ் இல / Fax No. 2697451
ඉලෙක්ට්‍රොනික් තැපැල් / ஈ-மெயில் / E-mail oaggov@sltnet.lk

1.3 கணக்காய்வின் நோக்கெல்லை மற்றும் அப்பிராயத்திற்கான அடிப்படை

என்னுடைய கணக்காய்வுப் பரிசோதனையை அடிப்படையாகக் கொண்டு இந்நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக அபிப்பிராயம் ஒன்றைத் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இவ்வறிக்கையிலுள்ள கணக்காய்வு அபிப்பிராயம், கருத்துரைகள், கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வையினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், நேரம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு உள்ளடக்கத்தைக் கொண்டதாகக் காணப்பட்டது. நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறள் கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்ளத்தக்க வகையில் கணக்காய்வானது இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு அமைய மேற்கொள்ளப்பட்டது. நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினதும், வெளிப்படுத்தல்களினதும் ஆதாரத்திற்கான சான்றுகளின் பரிசோதனை, நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கையில் முகாமைத்துவம் கடைப்பிடித்த கணக்கீட்டுத் தத்துவங்களினையும் குறிப்பிடத்தக்க மதிப்பீடுகளினையும் மதிப்பாய்வு செய்தல், நிதிக் கூற்றுக்களின் ஒட்டு மொத்த சமர்ப்பணம் மீதான மீளாய்வு போன்றவற்றினை கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது ஆகக்கூடிய அறிவு மற்றும் நம்பிக்கையின் பிரகாரம் கணக்காய்வு நடவடிக்கைகளுக்கு அவசியமான போதிய தகவல்கள் மற்றும் விளக்கங்கள் என்னால் பொறப்பட்டன இதன் பிரகாரம் எனது அபிப்பிராயத்திற்காக போதிய அடிப்படை ஒன்று கணக்காய்வின் மூலம் வழங்கப்படுகின்றது என்பது எனது நம்பிக்கையாகும். 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும், பரப்பையையும், நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

2. நிதிக்கூற்றுக்கள்

2.1 அபிப்பிராயம்

எனது ஆய்வுகளின் மூலம் தெரிய வந்தவை மற்றும் எனக்கு வழங்கப்பட்ட சிறந்த தகவல்கள் மற்றும் விளக்கங்களுக்கமைய, கொழும்பு பல்கலைக் கழகத்துடன் இணைக்கப்பட்ட மனித வளங்கள் மேம்மபாட்டு நிறுவகம் 2009 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கேடுகளைப் பேணியுள்ளது எனவும் இவ்வறிக்கையில் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களினால் நிதிக்கூற்றுக்களில் ஏற்பட்ட தாக்கங்களை தவிர, 2009 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கொழும்பு பல்கலைக் கழகத்துடன் இணைக்கப்பட்ட மனித வளங்கள் மேம்பாட்டு

நிறுவகத்தின் செயற்பாடுகள் தொடர்பான நிலைவரத்தையும், அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிசார் விளைவுகளையும், காசேட்டத்தினையும் உண்மையாகவும் நியாயமாகவும் வெளிப்படுத்தும் விதத்தில் நிதிக்கூற்றுக்களானவை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரிக்கப் பட்டிருந்தன என நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருந்துரைகள்

கணக்காய்விற்காக 2010 மார்ச் 02 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களில் காணப்பட்ட கணக்கீட்டுத் தவறுகளை உள்ளடக்கிய ஒரு கணக்காய்வு ஐயவினா 2010 மார்ச் 24 அந் திகதிய பணிப்பாளருக்கு அனுப்பப்பட்டதுடன் அதற்கிணங்க திருத்திய நிதிக் கூற்றுக்கள் 2010 ஏப்ரல் 27 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டன.

2.2.1 சச்சரவுத்தன்மையான கொடுக்கல் வாங்கல்

1994 யூன் 14 ஆந்திகதிய 95 ஆம் இலக்க பொது முயற்சிகள் திணைக்களை சுற்று நிருபத்திற்கு முரணாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட சுற்று நிருபம் ஒன்றின் பிரகாரம் இரண்டாம் மற்றும் மூன்றாம் மொத்த தேர்ச்சி தொடர்பாக சம்பளம் மற்றும் படிகளாக 23 உத்தியோகத்தர்களுக்கு 2009 ஆம் ஆண்டின் போது ரூபா. 78,841 செலுத்தப்பட்டிருந்தது.

2.2.2 இனங்காணப்படாத மீதி

2009 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நானாவித முற்பணங்கள் கணக்கிலிலுள்ள ரூபா. 197,829 மீதியும் விழா முற்பணங்கள் கணக்கிலுள்ள ரூபா. 1,450 மீதியும் விசேட முற்பணங்கள் கணக்கிலுள்ள ரூபா. 1,288 மீதியும் இனங்காணப்பட்டிக்கவில்லை.

2.2.3 செலவுகளுக்காக ஒதுக்கீடு செய்தல்

கொடுப்பனவுகளுக்காக ஒதுக்கீடுகளின் கீழ் காட்டப்பட்டுள்ள ரூபா. 1,691,855 கூட்டு மொத்த தொகையான 20 செலவு விடயங்களின் மீதிகள் ஒரு ஆண்டிற்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதும் இனங்காணப்பட்டு செம்மையாகப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

2.2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்னவற்றுடனான இணக்கமின்மைகள்

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியற்றுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழ்வே தரப்படுகின்றன.

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியற்றுக்கான தொடர்பு	இணக்கமின்மை
(அ) 2001 பெப்ரவரி 28 ஆந் திகதிய பீஎப்/பீஈ 14 ஆம் இலக்க பொது நிதிச் சுற்று நிருபம் VII ஆம் பந்தி	2009 ஆம் ஆண்டின் போது நிறுவகத்தினால் பொதுத் திறைசேரி ஏற்பாட்டின் மூலம் இடம்பெற்ற தொழிலாளர் கல்வி பட்டப்படிப்பு பாட நெறி தொடர்பான செயலமர்வு ஒன்று ரூபா. 170,290 செலவு செய்து சுற்றுலா விடுதியில் இடம் பெற்றது. அந்த செயலமர்விற்காக ஆகஸ்ட் 09 மற்றும் 10 ஆம் திகதிகளில் அது தொடர்பாக விரிவுரையாளர்களும் 25 உத்தியோகத்தர்களும் பங்கு பற்றியுள்ளார்கள் எனக் காட்டப் பட்டிருந்தும் கோவைகளின் பரிசோதனையின் போது 49 வயது வந்தவர்களும் சிறுவர்களும் பங்கு பற்றிருந்தமை அவதானிக்கப்பட்டது.
(ஆ) 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றுநிருபத்தின் 6:5:1 ஆம் பந்தி	நிதிக் கூற்றுக்களுடன் சேர்த்து வரைபு ஆண்டறிக்கையின் பிரதி ஒன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.
(இ) 2006 மார்ச் 24 ஆந் திகதிய 128 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றுநிருபம்	2009 ஒக்டோபர் 15 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2009 ஆம் ஆண்டிற்கான கொள்வனவுத் திட்டம் சுற்றுநிருபத்தின் பிரகாரம் தயாரிக்கப் பட்டிருக்கவில்லை.

		2009 ஆம் ஆண்டிற்கான தொள்வனவுத் திட்டத்தின் பிரதி உரிய திகதிக்கு முன்னர் திறைசேரிக்கும் உயர் கல்வி அமைச்சின் செயலாளருக்கும் அனுப்பி வைக்கப்பட்டிருக்கவில்லை
(ஈ)	இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணங்கள்	
	நி.பி 756	மீளாய்வாண்டிற்கான பொருள் மெய்மையாய்வு 2010 மார்ச் 25 ஆந் திகதி வரையும் இடம் பெற்றிருக்க வில்லை.

3. நிதிசார் மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2009 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிறுவகத்தின் செயற்பாட்டு விளைவுகள் மீண்டுவரும் செலவுக்கான அரசாங்க மானியத்தினைக் கணக்கிற்கு எடுத்துக் கொள்வதற்கு முன்னர் ரூபா. 12,297,565 பற்றாக்குறையாக இருந்ததுடன் முன்னைய ஆண்டிற்கான நேரொத்த பற்றாக்குறை ரூபா. 12,519,083 ஆக இருந்தது. இதற்கிணங்க மீளாய்வாண்டின் பற்றாக்குறை ரூபா. 221,518 இனால் குறைவடைந்திருந்தது. மீண்டுவரும் செலவுகளுக்காக பெறப்பட்ட ரூபா. 16,806,000 தொகையான அரசாங்க மானியத்தின் காரணமாக மீளாய்வாண்டின் பற்றாக்குறை ரூபா. 4,508,435 மிகையாக மாறியது. முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவுக்காக பெறப்பட்ட ரூபா. 16,380,000 தொகையான அரசாங்க மானியத்தின் காரணமாக அந்த ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா. 3,860,917 மிகையாக மாறியது. அரசாங்க மானியத்தின் காரணமாக மிகை ரூபா. 647,518 இனால் அதிகரித்திருந்தது.

3.2 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிறுவகத்தினால் பேணப்பட்டு வந்த பிரதான பட்டப் பாடநெறியாகிய தொழிற் கல்விப்பட்ட பாடநெறிக்காக 2009 ஆம் ஆண்டில் பதிவு செய்து கொண்ட மாணவர்களின் எண்ணிக்கை 590 ஆக இருந்ததுடன் அது முன்னைய ஆண்டினை விட 108 மாணவர்கள் குறைவாக இருந்தது.

(ii) 2009 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட பட்டப்படிப்பு I ஆம் ஆண்டு இரண்டாவது செமஸ்டரின் புதிய பாடத்திட்டப் பரீட்சை நடாத்தப்பட்டு 07 மாதங்கள் கடந்திருந்தும் பெறுபேறுகள் வெளியிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2009 ஆம் ஆண்டின் போது பணம் அறவிடும் 14 கற்கை நெறிகள் நடாத்தப்பட்டிருந்ததுடன் அதற்காகத் தோற்றிய மாணவர்களின் எண்ணிக்கை 6,678 ஆகும். பரீட்சைக்குத் தோற்றாத மாணவர்களின் எண்ணிக்கை 499 ஆக இருந்ததுடன், அது மொத்த மாணவர்களின் எண்ணிக்கையில் 7% ஆக இருந்தது. சித்தியடையாத மாணவர்களின் எண்ணிக்கை 300 ஆக இருந்ததுடன் அது மொத்த மாணவர்களின் எண்ணிக்கையில் 4% ஆக இருந்தது. 03 பரீட்சைகள் நடாத்தப்பட்டு

3.2 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) (i) நிறுவகத்தினால் பேணப்பட்டு வந்த பிரதான பட்டப் பாடநெறியாகிய தொழிற் கல்விப்பட்ட பாடநெறிக்காக 2009 ஆம் ஆண்டில் பதிவு செய்து கொண்ட மாணவர்களின் எண்ணிக்கை 590 ஆக இருந்ததுடன் அது முன்னைய ஆண்டினை விட 108 மாணவர்கள் குறைவாக இருந்தது.

(ii) 2009 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட பட்டப்படிப்பு I ஆம் ஆண்டு இரண்டாவது செமஸ்டரின் புதிய சிபார்சுப் பரீட்சை நடாத்தப்பட்டு 07 மாதங்கள் கடந்திருந்தும் பெறுபேறுகள் வெளியிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2009 ஆம் ஆண்டின் போது பணம் அறவிடும் 14 கற்கை நெறிகள் நடாத்தப்பட்டிருந்ததுடன் அதற்காகத் தோற்றிய மாணவர்களின் எண்ணிக்கை 6,678 ஆகும். பரீட்சைக்குத் தோற்றாத மாணவர்களின் எண்ணிக்கை 499 ஆக இருந்ததுடன், அது மொத்த மாணவர்களின் எண்ணிக்கையில் 7% ஆக இருந்தது. சித்தியடையாத மாணவர்களின் எண்ணிக்கை 300 ஆக இருந்ததுடன் அது மொத்த மாணவர்களின் எண்ணிக்கையில் 4% ஆக இருந்தது. 03 பரீட்சைகள் நடாத்தப்பட்டு 04 மாதங்களிலிருந்து 11 மாதங்கள் வரையான காலம் கடந்திருந்த போதிலும் பெறுபேறுகள் வெளியிடப்பட்டிருக்கவில்லை.

(இ) பணம் அறவிடும் பாடநெறிகளின் கட்டணமாக ரூபா. 63,458,657 தொகை 2009 ஆம் ஆண்டின் போது பெற்றுக்கொள்ளப்பட்டிருந்துடன் அதனை முன்னைய ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில் 28% அதிகரிப்பாகும்.

(ஈ) தொழிலாளர் கல்வி பட்ட பாடநெறிக்காக 2009 ஆம் ஆண்டின் போது 690 மணித்தியாலங்கள் ஒதுக்கப்பட்டிருந்ததுடன் அது செமஸ்டர் முறைமைக்கிணங்க தீர்மானிக்கப்படுகின்றது. இதற்கிணங்க ஒதுக்கப்பட்ட மணித்தியால எண்ணிக்கைகள் முன்னைய ஆண்டினை விட 630 விரிவுரை மணித்தியாலங்கள் குறைவாக இருந்தது. அவ்வாறே 2009 ஆம் ஆண்டின் போது நடாத்தப்பட்ட மொத்த விரிவுரை மணித்தியாலங்களின் எண்ணிக்கை 449 மணித்தியாலங்களாக இருந்ததுடன் அதனை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 766.5 மணித்தியாளங்கள் குறைவாக இருந்தது. நடாத்தப்பட்ட விரிவுரை மணித்தியாலங்களின் எண்ணிக்கையில் 169 மணித்தியாலங்கள் நிறுவனத்தின் இரண்டு உள்ளக விரிவுரையாளர்களினாலும் 280 மணித்தியாலங்கள் 13 வெளியக விரிவுரையாளர்களினாலும் நடாத்தப்பட்டிருந்தன. இதற்கிணங்க முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் பொழுது உள்ளக விரிவுரைகள் 101 மணித்தியாலங்களால்

குறைவடைந்தும் வெளியக விரிவுரையாளர்களால் நடாத்தப்பட்ட விரிவுரைகள் 665.5 மணித்தியாலங்களால் குறைவடைந்தும் காணப்பட்டன. மொத்த விரிவுரை மணித்தியாலங்களில் உள்ளக விரிவுரையாளர்களால் நடாத்தப்பட்ட விரிவுரை மணித்தியாலங்களின் அளவு 38% ஆக இருந்தது.

(உ) 2007/2008 ஆம் கல்வி ஆண்டு தொடர்பாக நடாத்தப்பட்ட தொழிலாளர் கல்வி பட்ட பாட நெறியின் டிப்ளோமா பாடநெறியினது இரண்டாவது செமஸ்டர் முடிவடைவதற்கு நிர்ணயிக்கப்பட்ட திகதியினை விட 02 மாதங்கள் மேலதிகமாகவும் தொழிலாளர் கல்வி பட்டமானி ஆண்டு I இரண்டாவது செமஸ்டர் முடிவடைவதற்கு நிர்ணயிக்கப்பட்ட திகதியினை விட 05 மாதங்கள் மேலதிகமாகவும் தொழிலாளர் கல்வி பட்டமானி ஆண்டு II இரண்டாவது செமஸ்டர் முடிவடைவதற்கு நிர்ணயிக்கப்பட்ட திகதியினை விட 03 மாதங்கள் தாமதமாகவும் பூர்த்தியடைந்திருந்தன.

3.3 பதவியணியினர் தகவல்

மீளாய்வாண்டின் இறுதியின் போது நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 35 ஆக இருந்ததுடன் உள்ளபடியான பதவியணியினர் 50 ஆகும். அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினருக்குப் புறம்பாக 03 ஒருங்கிணைப்பாளர் பதவிகளும் 12 செயற்திட்ட உதவியாளர்கள் பதவிகளும் காணப்பட்டன. மேலும் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரில் இல்லாத ஒருங்கிணைப்பாளர் பதவிக்காக பொறுப்புக்கள் ஒப்படைத்தல் அடிப்படையில்/ ஒப்பந்த அடிப்படையில் மேற்கூறப்பட்ட உத்தியோகத்தர்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டு கல்விக் குழுவின் அங்கீகாரத்தின் பேரில் அவர்களின் சேவைக் காலமும் படிகளும் தொடர்ச்சியாக அதிகரிக்கப்பட்டிருந்தன.

3.4 கூட்டிணைந்த திட்டமும் செயல் நடவடிக்கைத் திட்டமும்

(அ) 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்று நிருபத்தின் 5:1 ஆம் பந்திக்கு இணங்க கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப் பட்டிருக்கவில்லை.

(ஆ) நிறுவகத்தினால் 2009 ஆம் ஆண்டிற்காக செயல் நடவடிக்கைத் திட்டம் ஒன்று தயாரிக்கபட்டிருக்கவில்லை. இதன் காரணமாக 2009 ஆம் ஆண்டின் போது அடைந்து கொள்வதற்கு/நிறைவேற்றுவதற்கு எதிர்பார்க்கபட்ட குறிக்கோள்கள் மற்றும் இலக்குகள் என்ன என்பதும் அவற்றின் நிதி மற்றும் பௌதீக செயன் முன்னேற்றங்களையும் மதிப்பீடு செய்ய முடியாதிருந்தது.

3.5 பாதீட்டுக் கட்டுப்பாடு

2009 ஆம் ஆண்டிற்கான பாதீட்டில் உள்ளடக்கப்பட்ட சில விடயங்களுக்கான மதிப்பிடப்பட்ட வருமானங்களுக்கும் செலவுகளுக்கும் உள்ளபடியான வருமானங்களுக்கும் செலவுகளுக்கும் இடையே குறிப்பிடத்தக்க அளவு முரண்கள் காணப்பட்டது. இதற்கிணங்க மீளாய்வாண்டிற்கான பாதீடு செயற்திறனான முகாமைத்துவ கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்படடது.

4. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் பணிப்பாளாருக்கு காலத்துக்கு காலம் தெரிவிக்கப்பட்டது. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட அவதானம் கோரப்படுகின்றது.

(அ) ஆட்சேர்ப்புக்கள்

(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு

(இ) கருத்தரங்குகள் மற்றும் செயலமர்வுகளை நடாத்துதல்

(ஈ) படிக்கொடுப்பனவுகள்

ஒப்பம்: எஸ்.ஸ்வர்ணஜோதி
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

கொழும்புப் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்ட மனித வளங்கள் மேம்பாட்டு நிறுவகத்தின் 2009 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக் கூற்றுகள் மீது 1978 ஆம் ஆண்டு 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 108(2) ஆம் பிரிவு மற்றும் 1971 ஆம் ஆண்டு 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13 (7) (ஏ) பிரிவின் படி கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

நிதிக் கூற்று தொடர்பிலான அதிகாரம்	கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் சுட்டிக்காட்டப்பட்ட காரணம்	கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு இதுவரையில் முன்வைக்கப்பட்ட விளக்கம்	2012 வரையில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள், தற்போதைய நிலைமையும் முன்னேற்றமும்
2 நிதிக் கூற்று 2.2 நிதிக் கூற்றுத் தொடர்பிலான கருத்துரைகள்	கணக்காய்விற்காக 2010 மார்ச் 02 ஆம் திகதி அனுப்பப்பட்ட நிதிக் கூற்றுகளில் காணப்பட்ட கணக்கீட்டுத் தவறுகளை உள்ளடக்கிய ஒரு கணக்காய்வ ஐயவினா 2010 மார்ச் 24 ஆம் திகதி பணிப்பாளருக்கு அனுப்பப்பட்டதுடன் அதற்கிணங்க திருத்தப்பட்ட நிதிக் கூற்றுக்கள் 2010 ஏப்ரல் 27 ஆம் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டன.		திருத்தப்பட்டடள்ளது.
2.2.1 சச்சரவுத் தன்மையான கொடுக்கல் வாங்கல்கள்	1994 ஜுன் 14 ஆம் திகதிய 95 ஆம் இலக்க பொது முயற்சிகள் திணைக்களச் சுற்றறிக்கைக்கு முரணாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு வினால் வெளியிடப்பட்ட சுற்று நிருபம் ஒன்றின் பிரகாரம் இரண்டாம் மற்றும் மூன்றாம் மொழித் திறன் தொடர்பாக சம்பளம் மற்றும் படிகளாக 23 உத்தியோகத்தர்களுக்கு 2009 ஆம் ஆண்டின் போது ரூ. 78,841 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.	ஏற்றுக் கொள்ளப்பட்டது. மொழித் திறன் படிக் கொடுப்பனவு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்ட சுற்றறிக்கைக்கு அமைய கொடுப்பனவு செய்யப்படுகின்றது.	பல்கலைக்கழக மானிங்கள் ஆணைக்குழுவின் சுற்றறிக்கைக்கு அமைவாக நடவடிக்கை மேற்கொள்ளப் படுகின்றது.

நிதிக் கூற்று தொடர்பிலான அதிகாரம்	கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் சுட்டிக்காட்டப்பட்ட காரணம்	கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு இதுவரையில் முன்வைக்கப்பட்ட விளக்கம்	2012 வரையில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள், தற்போதைய நிலைமையும் முன்னேற்றமும்
2.2.2 இனங் காணப்படாத நிலுவை	2009 திசெம்பர் 31 இல் உள்ளவாறு, நானாவித முற்பணங்கள் கணக்கில் ரூ. 197,829 மீதியும், விழா முற்பணங்கள் கணக்கில் ரூ. 1,450 மீதியும், விடுே முற்பணங்கள் கணக்கில் ரூ. 1,288 மீதியும் இனங்காணப்படாத நிலுவைகளாக இருந்தன.	ஏற்றுக்கொள்ளப்பட்டது. இந்த நிலுவை 2000 ஆம் ஆண்டிற்கு முன்பிருந்து குறித்த விடயம் தொடர்பான தகவல்கள் இன்மையால் கணக்குகளில் முன் கொண்டு வரப்பட்டுள்ளது. இந்த நிலுவை சில வருடங்களுக்கு முன்னர் இனங் காணப்படாத நிலுவயைாக கணக்காய்வு அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த விடயம் நிறுவகத்தின் கணக்காய்வுக் குழுக் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டதுடன் கணக்குகளிலிருந்து பதிவு அழிப்பு செய்வது தொடர்பாக அங்கிகாரம் பெறுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதற்கிணங்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு, உயர் கல்வி அமைச்சு, பொதுத் திறைசேரியின் தீர்மானத்தைப் பெற்றுக் கொள்ள நிறுவகத்தின் கல்விசார் குழுவின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.	இந்த நிலுவையைப் பதிவழிப்பதற்கான அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கு திறைசேரிக்கு அனுப்பப்பட்டுள்ளது. (இணைப்பு 01)
2.2.3 செலவுகளுக்காக ஒதுக்கீடு செய்தல்	கொடுப்பனவுக்கான ஒதுக்கீடுகளின் கீழ் காட்டப்பட்டுள்ள ரூ. 1,691,855 கூட்டு மொத்தத் தொகையான 20 செலவு விடயங்கள் தொடர்பான நிலுவைகள் ஒரு வருடத்திற்கும் மேலாக இனம்காணப்பட்டு செம்மை செய்யப்படாதிருந்தது.	ஏற்றுக் கொள்ளப்பட்டது. இது தொடர்பாக குறித்த சகல பொருத்தப்பாடுகளும் உரிய முறையில் மேற்கொள்ளப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	இது 2010-07-21 திகதி செம்மையாக்கப் பட்டுள்ளது. VN 32-1443 (இணைப்பு 02)

நிதிக் கூற்று தொடர்பிலான அதிகாரம்	கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் சுட்டிக்காட்டப்பட்ட காரணம்	கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு இதுவரையில் முன்வைக்கப்பட்ட விளக்கம்	2012 வரையில் எடுக்கப்ட்ட நடவடிக்கைகள், தற்போதைய நிலைமையும் முன்னேற்றமும்
2.2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்து தீர்மானங்கள் என்பவற்றிற்கு இணங்காமை சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணக்கமற்ற சந்தர்ப்பங்கள்	சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றிற்கு இணங்கமற்ற சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன. இணக்கமின்மை 2009 ஆம் ஆண்டின் போது பொதுத் திறைசேரி மானியத்திலிருந்து சுற்றுலா விடுதியொன்றில் இடம்பெற்ற தொழிலாளர் கல்வி பட்டப்படிப்புப் பாடநெறி தொடர்பான செயலமர்வு ஒன்றிற்காக ரூ. 170,290 செலவிடப்பட்டிருந்தது.	ஏற்றுக் கொள்ளப்படவில்லை. தொழிலாளர் கல்வி பட்டப் படிப்புப் பாடநெறி பொதுத் திறைசேரி மானியத்தின் ஊடாக நடாத்தப்படுவது உண்மை. இருந்தபோதும், கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டது போல் நடாத்தப்பட்ட செயலமர்வு அதன் தொடக்க செயலமர்வல்லாததுடன் அது தொடர்பாக பொதுத்த திறைசேரி மானியம் பயன்படுத்தப் பட்டிருக்கவில்லை.	இது தொடர்பாக திறைசேரி மானியம் செலவிடப் படவில்லை. தோற்று விக்கப்ட்ட வருமானத்தில் இருந்தே செலவுகள் மேற்கொள்ளப் பட்டது.
(அ) 2001 பெப்ரவரி 28 ஆம் திகதிய பீஎப்.'.பீஈ 14 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கை எனை ஆம் பந்தி	அந்த செயலமர்வில் ஆகஸ்டு 9 ஆம் மற்றும் 10 ஆம் திகதிகளில் அதனுடன் தொடர்புடைய விரிவுரையாளர்களும் உத்தியோகத்தரகளுமாக 25 பேர் பங்குபற்றியதாகக் காட்டப்பட்ட போதும் உரிய கோவைகள் பரிசோதிக்கப்பட்ட போது 49 வயது வந்தவர்களும் சிறுவர்களும் பங்குபற்றியிருந்தமை அவதானிக்கப்பட்டது.	இந்தப் பாடநெறி நடாத்தப்படுவதற்கு அத்தியாவசியமான வெளிவாரி விரிவுரையாளர்கள் மற்றும் உள்வாரி விரிவுரையாளர்கள் தொடர்பாக குறித்த செயலமர்வு நடாத்தப்பட்டதுடன், அதற்காக அந்த வருடத்தில் குறித்த விண்ணப்பப் படிவம் விநியோகிக்கப்பட்ட போது, தற்போதும் மாணவர் அல்லாத வெளிவாரி விண்ணப்பதாரிகளிடமிருந்த அறவிடப்பட்ட பணத்திலிருந்தான மீதித் தொகையின் ஒரு பகுதி பயன்படுத்தப்பட்டிருந்தது. குறித்த செயலமர்வை நடாத்துவதற்கு, அது தொடர்பிலான வரவு செலவுத்திட்டம் தயாரிக்கபட்டு நிறுவகத்தின் கல்விசார் குழுவின் அங்கீகாரம் உரிய முறையில் பெறப்பட்டிருந்தது.	நேர காலத்திற்கு பரீட்சை முடிவுகளை வெளியிட வெளிவாரி விரிவுரையாளர்களை ஊக்கப் படுத்துவது இதன் ஒரு படியாகும். அவ்வாறு விரிவுரையாளர்கள் ஊக்கப்படுத்தப் பட்டுள்ளனர்.

நிதிக் கூற்று தொடர்பிலான அதிகாரம்	கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் சுட்டிக்காட்டப்பட்ட காரணம்	கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு இதுவரையில் முன்வைக்கப்பட்ட விளக்கம்	2012 வரையில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள், தற்போதைய நிலைமையும் முன்னேற்றமும்
		இந்த தொழிலாளர் கல்வி பட்டப் படிப்பு பாடநெறியில் 90% வரை வெளிவாரி விரிவுரையாளர்கள் மற்றும் உத்தியோகத்தர்களுக்கு மேலதிகமாக இந்த செயலமர்வின் அரச அலுவல்களுக்காக குறித்த விடையம் தொடர்பான அலுவலர்கள் சிலரும், கல்விசார் குழுவின் உறுப்பினர்கள் சிலரும், அந்தப் பாடநெறி உள்வாரி விரிவுரையாளர்களும் அந்த செயலமர்வில் பங்குபற்ற உரித்துடையவராயிருந்தனர். அத்தியாவசியமான விரிவுரையாளர்கள் சிலர் வார இறுதி நாட்களில் குழந்தைகளை விட்டு வர முடியாமையை தெரிவித்திருந்த மையினால் அதற்கு இடமளிக்கப்பட்டது. நிறுவகத்தினதும் பாடநெறியினதும் அபிவிருத்திக்காக இவ்வாறான செயலமர்வு அத்தியவசியமானது. 90% மான வெளிவாரி விரிவுரையாளர்களுக்காக குறித்த செயலமர்வை நடாத்துவதற்கு நிறுவத்தினுள் பொருத்தமான இடம் இல்லை.	
(ஆ) 2003 ஜூன் 02 ஆம் திகதிய பீஎடி.12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்று நிருபத்தின் 6:5:1 ஆம் பந்தி	நிதிக் கூற்றுக்களுடன் சேர்த்து வரைவு ஆண்டறிக்கையின் பிரதியொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பட்டிருக்க வில்லை.	ஏற்றுக் கொள்ளப்பட்டது. நிறுவகத்தில் நிரந்தர நிர்வாக அதிகாரியொருவர் 2009 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் இல்லாத காரணத்தால் ஆண்டகையை தயாரிப்பதில் தாமதம் ஏற்பட்டது. தற்போது 2009 ஆம் ஆண்டு ஆண்டறிக்கை தயாரிக்கப்படுகின்றது	வரைவு ஆண்டறிக்கை தயாரிக்கப்பட்டு மொழிபெயர்ப்பிற்கு அனுப்பப்பட்டுள்ளது.

நிதிக் கூற்று தொடர்பிலான அதிகாரம்	கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் சுட்டிக்காட்டப்பட்ட காரணம்	கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு இதுவரையில் முன்வைக்கப்பட்ட விளக்கம்	2012 வரையில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள், தற்போதைய நிலைமையும் முன்னேற்றமும்
(இ) 2006 மார்ச் 24 ஆம் திகதிய 128 ஆம் இலக்க தேசிய வரவு செலவுத்திட்ட சுற்று நிருபம்	2009 ஒக்தோபர் 15 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2009 ஆண்டிற்கான கொள்வனவுத் திட்டம் சுற்று நிருபத்தின் பிரகாரம் தயாரிக்கப் பட்டிருக்கவில்லை. 2009 ஆம் ஆண்டிற்கான கொள்வனவுத் திட்டத்தின் பிரதி உரிய திகதிக்கு முன்னர் திறைசேரிக்கும், உயர்கல்வி அமைச்சின் செயலாளருக்கும் அனுப்பி வைக்கப் பட்டிருக்கவில்லை.	ஏற்றுக் கொள்ளபட்டது. இந்த வேலையை மேற்கொள்ளும் அதிகாரியின் பதவி சில காலமாக வெற்றிடமாக இருந்ததுடன், புதிதாக நியமனம் பெற்று வந்தவரின் அரச அலுவல்களில் .. காரணமாக இந்த அலுவல்களில் தாமதம் ஏற்பட்டது. எப்படியாயினும், 2010 ஆண்டிற்கான கொள்வனவுத் திட்டம் உரிய முறையில் தயாரிக்கப்பட்டு உரிய பிரிவுகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.	201 ஆம் ஆண்டு கொள்வனவுத் திட்டம் (இணைப்பு 03)
(ஈ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணங்கள். நி.பி. 756	மீளாய்வாண்டு தொடர்பிலான பொருள் மெய்யாய்வு 2010 மார்ச் 25 ஆம் திகதி வரையும் இடம் பெற்றிருக்க வில்லை.	(ஈ) ஏற்றுக் கொள்ளப்பட வில்லை. பொருள் மெய்யாய்வு உரிய முறையில் நிறைவு செய்யப் பட்டிருந்ததுடன் அந்த அறிக்கையின் பிரதி அனுப்பப் பட்டிருந்தது.	நிறைவேற்றப் பட்டிருந்தது.
3 நிதிசார் மற்றும் செயற்பாட்டு மீளாய்வு 3.1 நிதிசார் விளைவுகள்	சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2009 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கு நிறுவகத்தின் செய்றபாட்டு விளைவுகள் மீண்டும் வரும் செலவினங்களுக்கான அரச மானியத்தினைக் கணக்கில் எடுத்துக் கொள்வதற்கு முன்னர் ரூ. 12,297,565 பற்றாக்குறையாக இருந்ததுடன் முன்னைய ஆண்டிற்கான தொடர்புபட்ட பற்றாக்குறை ரூ. 12,519,083 ஆக இருந்தது. இதற்கிணங்க மீளாய்வு ஆண்டின் பற்றாக்குறை ரூ. 221,518 இனால் குறைவடைந்திருந்தது. மீண்டும் வரும் செலவுகளுக்கான ரூ. 16,806,000 தொகையான அரசாங்க மானியத்தின் காரணமாக மீளாய்வாண்டின் பற்றாக்குறை ரூ. 3,860,917 மிகையாக மாறியது. அரச மானியத்தின் காரணமாக மிகை ரூ.647,518 இனால் குறைவடைந்திருந்தது.	ஏற்றுக் கொள்ளப்பட்டது.	முன்னைய வருட சுயநிதி பாடநெறி செலவிற்கான செலவு அறிக்கை ஊடாக அங்கீகரிக்கப்பட்ட தொகையாகும். பாடநெறி செலவு அறிக்கைக்கு அமைய நிதி செலவிடப்படுகின்றது

நிதிக் கூற்று தொடர்பிலான அதிகாரம்	கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் சுட்டிக்காட்டப்பட்ட காரணம்	கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு இதுவரையில் முன்வைக்கப்பட்ட விளக்கம்	2012 வரையில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள், தற்போதைய நிலைமையும் முன்னேற்றமும்
3.2 செயலாற்றல் (அ) i	பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப் படுகின்றன. நிறுகத்தினால் நடாத்தப்பட்டு வந்த பிரதான பட்டப் பாடநெறியான தொழிலாளர் கல்விப் பட்டப் பாடநெறிக்காக 2009 ஆம் ஆண்டில் பதிவு செய்து கொள்ளப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை 590 ஆக இருந்ததுடன் அது முன்னைய வருடத்தினை விட 108 மாணவர்கள் குறைவாக இருந்தது.	ஏற்றுக் கொள்ளப்பட்டது. இதற்கு முந்திய வருடங்களில் விரிவுரை நடாத்தப்பட்ட மண்டபம், உயர் பாதுகாப்பு வலயத்தில் இருந்த காரணத்தினால் 2009 ஆம் ஆண்டு முதல் அந்த மண்டபத்தைப் பெற்றுகொள்ள முடியாதிருந்தது. ஆதலால், அவ்வாறான இட விஸ்தீரணமுள்ள மண்டபத்தைப் பெற்றுக்கொள்ள முடியாமையின் காரணத்தினால் 2009 ஆம் ஆண்டு குறைந்தளவு மாணவர்களைப் பதிவு செய்ய வேண்டி ஏற்பட்டது. நடாத்தப்படும் பரீட்சை முடிவுகளைப் பரீட்சிப்பதற்கு வெளிவாரி விரிவுரையாளர்களின் சேவையை பெற்றுக்கொள்ள வேண்டியுள்ளதுடன், இதுவரையில் சகல முடிவுகளும் வெளியிட நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது.	முடிவுகள் வெளியிடப்பட்டு பட்டமளிப்பு விழா நாடாத்தப்பட்டுள்ளது.
செயலாற்றல் (அ) ii	2009 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட பட்டப் படிப்பு ii ஆம் ஆண்டு இரண்டாவது அரையாண்டில் புதிய பாடத்திட்டப் பரீட்சை நடாத்தப்பட்டு 07 மாதங்கள் கடந்திருந்தும் பெறுபேறுகள் வெளியிடப் பட்டிருக்கவில்லை.	ஏற்றுக் கொள்ளப் படவில்லை. அந்தக் கல்வியாண்டில் குறித்த பட்டப் படிப்பு iii வருட விரிவுரைகள் பழைய பாடத் திட்டத்தின் கீழ் நடாத்தப்பட்டமையால் 2008 ஆம் ஆண்டு பரீட்சைகள் நடாத்தப்பட்டு நிறைவு செய்யப்பட்டிருந்தது. அதன் காரணமாக 2009 ஆம் ஆண்டு நடாத்துவதற்கு பரீட்சைகள் எதுவும் இருக்கவில்லை.	பெறுபேறுகள் வெளியிடப் பட்டுள்ளன.

நிதிக் கூற்று தொடர்பிலான அதிகாரம்	கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் சுட்டிக்காட்டப்பட்ட காரணம்	கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு இதுவரையில் முன்வைக்கப்பட்ட விளக்கம்	2012 வரையில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள், தற்போதைய நிலைமையும் முன்னேற்றமும்
செயலாற்றல் (ஆ)	2009 ஆம் ஆண்டு கட்டணம் அறவிடப்படும் பாடநெறிகள் 14 நடாத்தப் பட்டிருந்ததுடன் அதற்காகத் தோற்றிய மாணவர்கள் எண்ணிக்கை 6,678 ஆகும். பரீட்சைகளுக்குத் தோற்றாத மாணவர்கள் எண்ணிக்கை 499 ஆக இருந்ததுடன், அது மொத்த மாணவர் எண்ணிக்கையில் 7 மூ ஆக இருந்தது. சித்தியடையாத மாணவர்களின் எண்ணிக்கை 300 ஆக இருந்ததுடன் அது மொத்த மாணவர்களின் எண்ணிக்கையில் 4மூ ஆக இருந்தது. 03 பரீட்சைகள் நடாத்தப்பட்டு 04 முதல் 11 மாதங்கள் வரை கடந்திருந்தும் பெறுபேறுகள் வெளியிடப் பட்டிருக்கவில்லை.	ஏற்றுக் கொள்ளப்பட்டது. நிறுவகத்தின் ஊடாக நடாத்தப்படும் கட்டணம் அறவிடப்படும் பாடநெறிகள் தொடர்பான விரிவுரை மற்றும் விடைத்தாழ் மதிப்பீடு என்பன வெளிவாரி விரிவுரையாளர்களினால் மேற்கொள்ளப் படுகின்றது. இங்கு விடைத்தாழ் மதிப்பீடு, புள்ளியிடல் உரிய நேரத்திற்குக் கிடைக்காமையின் காரணத்தினால் 14 பாடநெறிகளில் 03 பாடநெறிகள் தொடர்பான பரீட்சைப் பெறுபேறுகள் மட்டும் வெளியிடப்பட முடியவில்லை. எப்படியிருந்த போதும், அந்த பெறுபேறுகள் முடிந்தளவு விரைவாக வெளியிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளது.	பெறுபேறுகள் வெளியிடப் பட்டுள்ளன.
செயலாற்றல் (இ)	கட்டணம் அறவிடப்படும் பாடநெறி கட்டணங்களாக ரூ. 63,458,657 தொகை 2009 ஆம் ஆண்டில் கிடைக்கப் பெற்று இருந்ததுடன், அதனை முன்னைய ஆண்டுகளுடன் ஒப்பிடுகைளில் 28மூ அதிகரிப்பாகும்.	ஏற்றுக் கொள்ளப்பட்டது.	இதற்கு முந்திய வருடத்தில் பாடநெறிக்கு கொடுபட வேண்டிய பணம் பாத்தீடுக்கு இணங்க செலவிடப்பட்டிருந்ததுடன் தற்போது செலவு முற்றுப்பெற்றுள்ளது.

நிதிக் கூற்று தொடர்பிலான அதிகாரம்	கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் சுட்டிக்காட்டப்பட்ட காரணம்	கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு இதுவரையில் முன்வைக்கப்பட்ட விளக்கம்	2012 வரையில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள், தற்போதைய நிலைமையும் முன்னேற்றமும்
செயலாற்றல் (ச)	தொழிலாளர் கல்விப் பட்ட பாடநெறிக்காக 2009 ஆம் ஆண்டின் போது 690 மணித்தியாலங்கள் ஒதுக்கப் பட்டிருந்ததுடன், அது அரையாண்டு முறைமைக்கு அமைய தீர்மானிக்கப் படுகின்றது. அதற்கு இணங்க ஒதுக்கப்பட்ட மணித்தியாலங்களின் எண்ணிக்கை முன்னைய ஆண்டினை விட 630 விரிவுரை மணித்தியாலங்கள் குறைவாக இருந்தது. அவ்வாறே 2009 ஆம் ஆண்டின் போது நடாத்தப்பட்ட மொத்த விரிவுரை மணித்தியாலங்களின் எண்ணிக்கை 449 மணித்தியாலங்களாக இருந்ததுடன் அது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 766.5 மணித்தியாலங்கள் குறைவாக இருந்தது. நடாத்தப்பட்ட விரிவுரை மணித்தியாலங்களின் எண்ணிக்கையில் 169 மணித்தியாலங்கள் நிறுவகத்தின் இரண்டு உள்ளக விரிவுரையார்களினாலும் 280 மணித்தியாலங்கள் 13 வெளிவாரி விரிவுரையாளர்களாலும் நடாத்தப்பட்டிருந்தன. இதற்கு இணங்க முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் உள்ளக விரிவுரையாளர்களால் மேற்கொள்ளப் பட்ட விரிவுரை மணித்தியாலங்கள் 101 ஆக குறைந்திருந்ததுடன் வெளிவாரி விரிவுரையாளர்களினால் மேற்கொள்ளப் பட்ட விரிவுரை மணித்தியாலங்கள் 655.5 ஆல் குறைவடைந்திருந்தது. மொத்த விரிவுரை மணித்தியாலங்களில் உள்ளக விரிவுரையாளர்களினால் நடாத்தப்பட்ட விரிவுரை மணித்தியாலங்களின் அளவு 38மூ ஆகும்.	ஏற்றுக் கொள்ளப்பட்டது. 2009 ஆம் ஆண்டிற்கு முன்னைய ஆண்டுகளில் ஆங்கில மொழி மூல பாடநெறி நடாத்தப்பட்டது. 2009 ஆம் ஆண்டில் ஆங்கில மொழி மூலப் பாடநெறி நடாத்தப் படாததுடன் பட்டப் படிப்பு ஜஜஜ வருட பாடநெறி விரிவுரை 2009 செப்டம்பர் மாத பிற்பகுதியில் ஆரம்பித்த காரணத்தினால் விரிவுரை மணித்தியாலங்கள் குறைவடைந்து இருந்தது.	வெளிவாரி விரிவுரையாளர்களுக்கு

நிதிக் கூற்று தொடர்பிலான அதிகாரம்	கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் சுட்டிக்காட்டப்பட்ட காரணம்	கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு இதுவரையில் முன்வைக்கப்பட்ட விளக்கம்	2012 வரையில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள், தற்போதைய நிலைமையும் முன்னேற்றமும்
செயலாற்றல் (உ)	2007/ 2008 ஆம் கல்வி ஆண்டு தொடர்பாக நடாத்தப்பட்ட தொழிலாளர் கல்வி பட்ட பாட நெறியின் டிப்ளோமா பாடநெறியினது இரண்டாவது செமஸ்டர் முடிவடைவதற்கு நிர்ணயிக்கப்பட்ட திகதியினை விட 05 மாதங்கள் மேலதிகமாகவும் தொழிலாளர் கல்வி பட்டமானி ஆண்டு ஐ இரண்டாவது செமைஸ்டர் முடிவடைவதற்கு நிர்ணயிக்கப்பட்ட திகதியினை விட 03 மாதங்கள் தாமதமாகவும் பூர்த்தியடைந்திருந்தன.	ஏற்றுக் கொள்ளப்பட்டது. 2009 ஆம் ஆண்டிற்கு முன்னைய ஆண்டுகளில் ஆங்கில மொழி மூல பாடநெறி நடாத்தப்பட்டது. 2009 ஆம் ஆண்டில் ஆங்கில மொழி மூலப் பாடநெறி நடாத்தப் படாததுடன் பட்டப் படிப்பு ஐஐஐ வருட பாடநெறி விரிவுரை 2009 செப்டம்பர் மாத பிற்பகுதியில் ஆரம்பித்த காரணத்தினால் விரிவுரை மணித்தியாலங்கள் குறைவடைந்து இருந்தது. நிறுவகத்தின் உள்ளக விரிவுரையாளர்கள் இருவர் தவிர மேலதிகமான ஏனைய சகல விரிவுரையாளர்களும் வெளிவாரி விரிவுரையாளர்களாகும். அவர்களில் சிலருக்கு அத்தியாவசியமான சில காரணங்களால் குறித்த தினத்திற்கு விரிவுரை நடாத்த முடியாது போனமையினால் இந்த நிலை ஏற்பட்டது. இதுவரையில் இந்த நிலைமையைத் தவிர்ப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளது.	நாளாந்தம் SMS ஊடாக நிவைவூட்டப் படுகின்றது. சகல அலுவலங்களிலிருந்தும் வருகை தரும் மாணவர்களுக்கும் விரிவுரை மாற்றங்கள் பற்றி SMS ஊடாக அறியத் தரப்படுகின்றது.

நிதிக் கூற்று தொடர்பிலான அதிகாரம்	கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் சுட்டிக்காட்டப்பட்ட காரணம்	கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு இதுவரையில் முன்வைக்கப்பட்ட விளக்கம்	2012 வரையில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள், தற்போதைய நிலைமையும் முன்னேற்றமும்
3.3 பதவி அணியினர் தகவல்	மீளாய்வு ஆண்டின் இறுதியில் நிறுவகத்தின் அங்கீகரிக்கப் பட்ட பதவி அணியினர் 35 ஆக இருந்ததுடன், உள்ளபடியான பதவியணியினர் 50 ஆகும். அங்கீகரிக்கப் பட்ட பதவியணியினருக்கு புறம்பாக 03 ஒருங்கிணைப்பாளர் பதவிகளும் 12 செயற்றிட்ட உதவியாளர் பதவிகளும் காணப்பட்டன. மேலும் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் இல்லாத ஒருங்கிணைப்பாளர் பதவிக்காக பொறுப்புகள் ஒப்படைத்தல் அடிப்படையில்.். ஒப்பந்த அடிப்படையில் மேற்படி உத்தியோகத்தர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டு கல்விசார் குழுவின் அங்காரத்தின் பேரில் அவர்களின் சேவைக் காலமும் படிகளும் தொடர்ச்சியாக அதிகரிக்கப்பட்டிருந்தன.	ஏற்றுக் கொள்ளப்படவில்லை. மேலதிக பதிவியணியினர் நிறுவகத்தில் இல்லை. அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 35 பேர் தவிர, மேலதிக பதவியணியினர் அல்லாத செயற்றிட்டத்தின் கீழ் 15 பேர் உள்ளனர். மேலதிகமாக உள்ளவர்கள் பொறுப்புக்கள் ஒப்படைத்தல் அடிப்படையில் நிறுவகத்தினால் நடாத்தப்படுகின்ற மேலதிக செயற்றிடத்தின் கீழ் குறுகிய கால பாடநெறிகள் சம்பந்தமான அலுவல்கள் தொடர்பாக ஒருங்கிணைப்பாளர் மூவரும் செயற்றிட்ட உதவியாளர்கள் 12 ஆகவுள்ளதுடன் அவர்கள் நிறுவகத்தின் மேலதிக பதவியணியினர் அல்ல. இந்த செற்றிட்ட பொறுப்பாளர்களுக்கான கொடுப்பனவு தொடர்பாக பொதுத் திறைசேரி மானியம் கிடைப்பதில்லை என்பதுடன் குறித்த பாடநெறி வருமானத்திலிருந்து கல்விசார் குழுவினால் அங்கீகரிக்கப் பட்ட செலவுத் திட்டத்திற்கு அமைய கொடுப்பனவு மேற்கொள்ளப் படுகின்றது. இந்தப் பாடநெறிகளுக்காக சேர்துக்கொள்ளப்பட்ட பொறுப்பாளர்களின் ஆட் சேர்பின் போது தொடக்க படி குறித்த பாடநெறியின் வளர்ச்சி, மாணவர் எண்ணிக்கை அதிகரிப்பு, வேலை மற்றும் அரச அலுவல் அதிகரிப்பு வாழ்கைச் செலவு அதிகரிப்பு என்பன பரிசீலிக்கப்பட்டு குறித்த பாடநெறிக் குழுவின் அவதானத்துடன் கல்விசார் குழுவின் அங்கீகாரத்துடன் அதிகரிக்கப்பட்டிருந்தது	தோற்றுவித்த வருமாத்தின் ஊடாக உருவாக்கப்பட்ட வேலைவாய்ப்பு.

நிதிக் கூற்று தொடர்பிலான அதிகாரம்	கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் சுட்டிக்காட்டப்பட்ட காரணம்	கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு இதுவரையில் முன்வைக்கப்பட்ட விளக்கம்	2012 வரையில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள், தற்போதைய நிலைமையும் முன்னேற்றமும்
3.4 கூட்டிணைந்த திட்டமும் செயல் நடவடிக்கைத் திட்டமும்	2003 ஜுன் 02 ஆம் திகதிய பீசிடீ 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்று நிருபத்தின் 5:1 ஆம் பந்திக்கு இணங்க நிறுவகத்தின் கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்பட்டிருக்க வில்லை.	ஏற்றுக் கொள்ளப்பட்டது. 2008 ஆம் ஆண்டில் 09 மாத காலத்திற்கு நிறுவகத்தில் நிரந்தர நிர்வாக பதிவாளர் ஒருவரோ நிதியாளர் ஒருவரோ இல்லாதிருந்த காரணத்தினால் கூட்டிணைந்த திட்டமும் செயல் நடவடிக்கைத் திட்டமும் தயாரிப்பதில் தாமதம் ஏற்பட்டது.	குறித்த அலுவலர்கள் கிடைக்ப் பெற்றுள்ளனர். திட்டம் தயாரிக்கப் பட்டுள்ளது.
	நிறுவகத்தினால் 2009 ஆம் ஆண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப் பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக 2009 ஆம் ஆண்டின் போது அடைவதற்கு.'. நிறைவேற்றுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட குறிக்கோள்கள் மற்றும் இலக்குகள் என்ன என்பதும் அவற்றின் நிதி மற்றும் பௌதீக செயலாற்றலை மதிப்பீடு செய்ய முடியாதிருந்தது.	புதிய அலுவலர் நியமனம் பெற்று வந்த பின்னர் இந்த நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்ட போதும் மீண்டும் ஒரு தடைவ அவ்விரு அலுவலர்களும் நிறுவகத்திலிருந்து விலகிச் சென்றமை காரணமாக அந்நடவடிக்கை கிடப்பில் போடப்பட்டது. மீண்டும் குறித்த பதவிகளுக்கு புதிய அலுவலர்கள் நியமனம் பெற்று வந்தவுடன் அவர்களினால் முடிந்தளவு விரைவாகத் திட்டம் தயாரிக்க நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளது.	

நிதிக் கூற்று தொடர்பிலான அதிகாரம்	கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் சுட்டிக்காட்டப்பட்ட காரணம்	கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு இதுவரையில் முன்வைக்கப்பட்ட விளக்கம்	2012 வரையில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள், தற்போதைய நிலைமையும் முன்னேற்றமும்
3.5 பாத்தீட்டுக் கட்டுப்பாடு	2009 ஆம் ஆண்டிற்கான பாத்தீட்டில் உள்ளடக்கப்பட்ட சில விடயங்கள் தொடர்பில் மதிப்பிடப்பட்ட வரவு செலவிற்கும் உள்ளபடியான வரவு செலவிற்கும் இடையே கணிசமான அளவு வேறுபாடு காணப்பட்டது. இதன்படி மீளாய்வு ஆண்டிற்கான பாத்தீடு செயற்திறனான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப் பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப் பட்டது.	ஏற்றுக் கொள்ளப்படவில்லை. மதிப்பீட்டு செலவினத்திற்கும் உள்ளபடியான செலவினத்திற்கும் இடையேயான வேறுபாட்டிற்கு காரணம் கீழே தரப்பட்ட சில வெளிக் காரணிகள் காரணமாகும். (i) 2009 ஆம் ஆண்டில் நிர்வாக மற்றும் நிதி அலுவலர் நியமிப்பதில் தாமதம் ஏற்பட்ட காரணத்தினால் உத்தேசித்தவாறு திட்டத்தை செய்ற்படுத்த முடியாமல் போனது. (ii) எழுதுவினைஞர் மற்றும் ஒத்த தரங்களில் ஊழியர்களை ஆட் சேர்ப்பதில் வரையறைகள் (திறைசேரி) இடப்பட்டதன் காரணமாக உத்தேசித்த ஆட் சேர்ப்பு நடவடிக்கை இடம்பெறவில்லை. (iii) விலையுர்வு காரணமாக சில செலவுகள் பாத்தீட்டு வரையறைக்குள் பேண முடியாது போனது. (உதாரணம் - அச்சு இயந்திரம், மை, கடதாசி முதலியன.)	2011 ஆம் ஆண்டு திருத்தம் செய்வதற்கு குறித்த அலுவலர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.
4. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்	கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் பணிப்பாளருக்கு காலத்துக்குக் காலம் தெரிவிக்கப்பட்டது. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பில் விஷேட அவதானம் கோரப்படுகின்றது. (அ) ஆட்சேர்ப்பு	உரிய முறையில் ஆட்சேர்ப்பு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	எதிர்காலத்தில் உரிய முறையில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்
	(ஆ) பாத்தீட்டுக் கட்டுப்பாடு		மேலே காட்டப்பட்டுள்ளது.

நிதிக் கூற்று தொடர்பிலான அதிகாரம்	கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் சுட்டிக்காட்டப்பட்ட காரணம்	கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு இதுவரையில் முன்வைக்கப்பட்ட விளக்கம்	2012 வரையில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள், தற்போதைய நிலைமையும் முன்னேற்றமும்
	(இ) கருத்தரங்குகளும் செயலமர்வுகளும் நடாத்துதல்	நிறுவகத்தினால் நடாத்தப்படும் சகல கருத்தரங்குகளும் செயலமர்வுகளும் தொர்பாக உரிய அங்கீகாரம் அங்கீகாரம் பெறப்பட்டு நடாத்தப்பட்டுள்ளது. பொதுத் திறைசேரி நிதியத்தைப் பயன்படுத்தி எந்தப் பாடநெறி அங்குராற்பண செயலமர்வும் எந்தத் தனியார் ஹோட்டலிலும் நடாத்தப்படவில்லை.	தோற்றுவிக்கப்பட்ட நிதியிலிருந்து அங்கீகரிக்கப்பட்ட பாத்தீட்டுக்கு இணங்க நடாத்தப்படுகின்றது.
	(ஈ) படிக் கொடுப்பனவுகள்	சகல படிகள் மற்றும் கொடுப்பனவுகள் உரிய முறையில் பெறப்பட்ட அங்கீகாரத்துடனேயே மேற்கொள்ளப்பட்டன.	அங்கீகரிக்கப்பட்ட வரவு செலவுத் திட்டத்திற்கு இணங்க தோற்றுவிக்கப்பட்ட வருமானதின் ஊடாக மேற்கொள்ளப் படுகின்றது.